அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்

மலர் : 5 இதழ் : 8 ஆகஸ்ட் - 2014 (தனிச்சுற்றுக்கு மட்டும்)

thirukkalyanamatha.com



## அன்னையின் அரவணைப்பில் அகிலம்!

# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230

kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்

அருட்திரு. R. ஜோசப் ரவிபாலன்

**ஆலோசகர் குழு**

அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்
அருட்திரு. ஜோசப் பாக்கியராஜா
அருட்சகோதரி. புளோரா

**ஆசிரியர் குழு**

அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

**தொடர்பு முகவரி**

திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230

**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**

திருத்தலக்கடை : 04639 -261330
திருத்தல அலுவலகம் : 04639 -261430

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| திருப்பாடல்கள் அறிமுகம் | 2 |
| புனித கிளாரா | 6 |
| முதல்சனி வழிபாடு | 7 |
| கன்னிமரியின் விண்ணேற்பு | 11 |
| திருச்சபை செய்திகள் | 12 |
| புனித வின்சென்ட்தேபவுல் | 16 |
| நற்கருணை பற்றி புனிதர்கள் | 18 |
| கவிதைச் சோலை | 20 |
| குட்டீஸ் கார்னர் | 23 |
| இந்திய சுதந்திரப் போர் | 27 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 31 |
| திருவிவிலியம் நமது செல்வம் | 32 |

வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

# ஆசிரியரின் அருளுரை



இயேசுவில் அன்புக்குரியவர்களே திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே! மானிட மீட்பின் வரலாற்றில் நம் அன்புத் தாய் யாருக்கும் எட்டாத உயரத்தில் இருக்கிறார் என்பது உலகறிந்த உண்மை மிக முக்கியப் பணிக்கென இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட நம் அன்னை மரியா தாம் பெற்ற அழைப்புக்கேற்றபடி வாழ்ந்து, இறைவனுக்கு முற்றிலும் கீழ்படிந்து, அவருக்குப் பிரமாணிக்க முள்ளவராய்த் திகழ்ந்ததன் பயனாக இவ்வுலகில் யாரும் பெறாத பேற்றினைப் பெற்று, தம் உடலோடும் ஆன்மாவோடும் இறைவனால் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

இம்மாதம் பதினைந்தாம் நாள் அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடவிருக்கிறோம். மரியாவின் விண்ணேற்பு குறித்து நேரடி விவிலியச் சான்று ஏதுமில்லையெனினும் , திருச்சபையின் தொடக்கக்காலத்திலிருந்து, இம்மாபெரும் உண்மைக் குறித்து பாரம்பரியம் இருந்ததையும், திருச்சபையின் மதிப்புமிக்கத் தந்தையரும் இறையியல் வல்லுனர்களும் இவ்வுண்மையைக் குறித்து விவாதித்து வந்ததையும் யாரும் மறுக்கமுடியாது. மரியாவின் விண்ணேற்புப் பற்றிய திருச்சபையின் பிரகடனம் கொஞ்சம் தாமதமாகத்தான் வந்தது. 1950ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் நாள் திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர் மிகவும் கிருபையுள்ள கடவுள் என்கிற பொருள்படும் முனிஃபிசென்றிஸிமுஸ் தேயூஸ் **(Munificentissimus Deus)** என்கிற இலத்தீன் தலைப்பிட்ட சுற்று மடலின் வாயிலாக மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விசுவாச சத்தியத்தைப் பிரகடனம் செய்தார்.

இயேசுதான் துஞ்சினோரின் முதற்கனி என்று புனித பவுல கூறுகிறார் (1கொரி 15:20). மானிடராகிய நாம் இவ்வுலக முடிவின்போது, உடலோடு உயிர்த்தெழுவோம் என்று நம் திருமறை நமக்குக் கற்பித்துள்ள விசுவாசம் நமக்கு எடுத்துக் கூறுகிறது. ஆனால் நம் அன்னை மரியா இதற்கு விதிவிலக்கு. ஆண்டவரே நம்பிய நீர் பேறுபெற்றவர் ( லூக் 1:45) என்று எலிசபெத்து வாழ்த்தியதற்கேற்ப, மரியா கடவுளை நம்பி, அவரிடத்தில் முழுமையாகச் சரணடைந்தார். ஆகவே கடவுள் தம் தாராள மனத்தினாலும், பேரன்பினாலும், நம் அன்னையை உயர்த்தி, இயேசுவின் உயிர்ப்பில் கலந்துகொள்ளச் செய்தார். அன்னையின் விண்ணேற்றம் அவரது சாதனையா அல்லது எல்லாம் வல்ல இறைவனின் பேரன்பின் வெளிப்பாடா என்று விவாதிப்பதில் அர்த்தமில்லை. அன்னையின் விண்ணேற்பு நம் நம்பிக்கையைப் பெருக்க வேண்டும். நம் அன்னையை இறைவன் உயர்த்தியதுபோல, அன்னையை நேசிக்கும் பிள்ளைகளாகிய நம்மையும் கடவுள் உயர்த்துவார் என்கிற அற்புதச் செய்தியை அன்னையின் விண்ணேற்பு நிகழ்ச்சி நமக்குத் தருகிறது. அன்னை மேலான இடத்திற்கு இறையருளால் உயர்த்தப்பட்டதைக் கொண்டாடும் அதே நாளில், நம் பாரதத்தின் சுதந்திரத் தினத்தையும் கொண்டாடுவது இந்தியர்களாகிய நமக்கு பெருமையல்லவா! நம் தாயின் பாதங்களில் நம் நாட்டை அர்ப்பணித்து, நம் எல்லோரையும் அவர் தொடர்ந்துப் பராமரித்துப் பேணிட அவரிடம் உருக்கமாக வேண்டுவோமாக.

– அருட்திரு. **R.ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை

# திருப்பாடல்கள் – அறிமுகம்

முனைவர் அருட்திரு. **R.ஜோசப் ரவி பாலன்**

பழைய ஏற்பாட்டில் அறிவுரை நூல்கள் அல்லது ஞான நூல்கள் என்கிற பிரிவில் திருப்பாடல்கள் இணைக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு நோக்கங்களுக்காக இயற்றப்பட்டுள்ள திருப்பாடல்கள் இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டில் பயன்படுத்துவதற்காக மொத்தமாகத் தொடங்கப்பட்டுள்ளன. தொடக்கக்காலத்தில் இஸ்ரயேல் நாட்டில் பல்வேறு இடங்களில் செயல்பட்டுக்கொண்டிருந்த வழிபாட்டுத்தலங்களில், பல்வேறு நோக்கங்களுக்காக மக்களால் கொண்டாடப்பட்ட வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பாடுவதற்காக பலரால் திருப்பாடல்கள் இயற்றப்பட்டன. பின்பு கி.மு. 10ஆம் நூற்றாண்டில் மையப்பகுதியில் சாலமோன் மன்னரால் கட்டப்பட்ட எருசலேம் ஆலயத்திலும், பாபிலோனின் அடிமை நிலை முடிவுற்று, கி.மு. 520 முதல் 515ஆம் ஆண்டளவில் கட்டியெழுப்பப் பட்ட 'செருபாபேல் ஆலயம்' என்றழைக்கப்பட்ட எருசலேமின் இரண்டாம் ஆலயத்திலும் அதிகமானப் பாடல்கள் இயற்றப்பட்டு, ஆலய வழிபாட்டு நிகழ்ச்சிகளுக்குப் பயன் படுத்தப்பட்டன. இஸ்ரயேலரின் வழிபாட்டுத் தேவைகளுக்காக உருவாக்கப்பட்டத் திருப்பாடல்கள் ( நம் ஆலயங்களில் வழிபாடுகளுக்காகப் பல பாடல்கள் இயற்றப்பட்டுள்ளதைப் போல!) ஆரம்பத்தில் கடவுளைப் பார்த்து மக்கள் பாடுவதாக அமைந்திருந்தன ஆனால் இறைவனுக்காக, அவரது பெருமைகளைப் பறைசாற்றுவதற்காக மக்களால் உருவாக்கப்பட்டுப் பக்தியோடு பாடப்பட்டப் பாடல்கள், பிற்காலத்தில் இறைவன் மனிதருக்கு வழங்கும் செய்தியாக, இறைவார்த்தயையாக இவை மாறிப் போயின. ஆகவேதான் திருப்பாடல்களை விவிலியம் தாங்கி நிற்கும் இறைவார்த்தையின் ஓர் அங்கமாக யூதப் பராம்பரியமும், கிறித்தவப் பராம்ாரியமும் ஏற்றுக்கொண்டுள்ளன.

**1. ஆசிரியர்:** திருப்பாடல்கள் அனைத்தையும் ஒருவர் தான் எழுதினார் என்ற சொல்லிவிட முடியாது. பல நபர்கள் எழுதியிருக்கலாம் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டக் கருத்து. மோசேயின் காலத்திலிருந்து (கி.மு. 1250 ) பாபிலோனின் அடிமை நிலை முடிவுற்றுக் காலம் வரை ( கி.மு. 6ஆம் நூற்றாண்டின் முடிவு ) பல நூற்றாண்டுகளாகத் திருப்பாடல்கள் பலரால் எழுதப்பட்டிருக்கலாம் என்கிற கருத்து உள்ளது (திருப்பாடல்கள் 90!91ஐ மோசே எழுதியிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது ). சில அறிஞர்களின் கருத்தின்படி, தாவீது (கி.மு. 1000!960) மற்றும் சாலமோன் (கி.மு. 960!930) அரசர்களின் காலத்தில் திரப்பாடல்கள் எழுதப்பட்டிருக்கலாம். பிற்காலத்தில் எசேக்கியா (கி.மு. 715!687 ) மற்றும் யோசியா ( கி.மு. 640!609 ) ஆகிய அரசர்களின் ஆட்சிக்காலங்களில் ஏற்பட்ட சமயச் சீர்திருத்தங்களின்போது சில பாடல்கள் இயற்றப்பட்டு ஏற்கெனவே இருந்த திருப்பாடல்களோடு சேர்க்கப்பட்டன என்றும் கருதப்படுகிறது. பொதுவாக தாவீது மன்னர் திருப்பாடல்களின் ஆசிரியர் என்றழைக்கப்படுகிறார். அப்படியென்றால் எல்லாப் பாடல்களையும் அவர்தான் இயற்றினாரா என்கிற கேள்வி எழுகிறது. தாவீது ஓர் இசைக் கலைஞரும் ஆவார் ( காண்க. 1சாமு 18:10 1 குறி 23:5; நெகே 12:36; ஆமோ6:51;). அந்த



David praising God upon the harp.

அடிப்படையில் திருப்பாடல்கள் யாவும் அவரால் இயற்றப்பட்டன என்கிற மரபு உருவானது. பல திருப்பாடல்கள் ( 3-41, 51-71, 108-110, 122-124,131,13-145 ) தாவீது அரசரால் எழுதப்பட்டவை என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், உண்மையில் அவையனைத்தையும் அவர் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்பதுதான் விவிலிய அறிஞர்களின் கருத்து. ஒருவேளை அவரைக் குறித்து எழுதப்பட்டத் திருப்பாடல்கள் அவரால் எழுதப்பட்டன என்று தவறாகப் புரிந்துகொள்ளப் பட்டிருக்கலாம்.

**2.திருப்பாடல்களின் இலக்கிய வகைகள்:** பிரிவினைச் சபையைச் சேர்ந்து இதில் உலகப் புகழ் பெற்ற ஜெர்மானிய விவிலிய வித்தகர் ஹெர்மன் குங்கல் ( கி.பி. 1862!1932 ) என்பவரின் கருத்துப்படி திருப்பாடல்கள் கீழ்க்கண்ட இலக்கிய வகைகளாகப் பிரிக்கப்படலாம். 1. இறைப்புகழ் திருப்பாக்கள்; 2. தனியாரின் புலம்பல்; 3. சமூகப் புலம்பல்; 4. அரசப் பாடல்கள்; 5. அறிவுரை பாடல்கள். வேறு சில விவிலிய அறிஞர்கள் சற்று மாறுபட்ட இலக்கிய வகைப் பிரிவுகளை முன்னைக்கின்றனர். நாம் ஹேர்மன் குங்கல் பிரித்துத் தந்துள்ளதின் அடிப்படையில் திருப்பாடல்களின் தொகுப்பைப் பற்றிப் படிக்கலாம்.

**2.1. இறைப்புகழ் திருப்பாக்கள்:** கடவுளின் மகிமையையும், மாட்சியையும் புகழ்ந்து பாடுவதோடு, சீயோனின் பெருமைகள் மற்றும் அரச மாண்பு ஆகியவற்றை வாழ்த்திப் பாடும் பாடல்கள் இறைப்புகழ் திருப்பாக்கள் என்று அழைக்கப்படுகின்றன. திபா 8, 19, 29, 33, 46!48, 76, 84, 87, 93, 95!99, 100, 104, 113, 114, 117, 122, 135!136, 145!150 போதன்றவை இறைப்புகழ் திருபாக்கள் பிரிவைச் சார்ந்துள்ளன. இறைப்புகழ் திருப்பாடல்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். அவையாவன: இறைப்புகழ் திருப்பாக்கள், யாவேயின் அரச மாண்புப் பாடல்கள் மற்றும் சீயோன் புகழ் திருப்பாக்கள்.

**2.2. தனியாரின் புலம்பல்:** புலம்பல் எதிர்மறையாகப் பார்க்கப்படக் கூடாது. புலம்பலில் நம்பிக்கை இருக்கிறது. ஒரு நபர் தான் பெற்றுள்ள மிகக் கடுமையான துன்பத்தைக் குறித்து. கடவுளிடத்தில் எடுத்துக் கூறுதல்தான் புலம்பல் வகை திருப்பாடல்கள். தனிப்பட்டத் துன்பத்தைக் குறித்து ஒரு நபர் இறைவனிடம் பேசும்போது, ஆகவே அவரது செபமாக மாறி விடுகிறது. அதைப்போலவே, இந்தப் பிரிவைச் சேர்ந்த பாடல்கள் ஆபத்து வேளைகளிலும், பயங்கரச் சூழ்நிலைகளிலும்

இறைவன் செய்த மிகப்பெரிய நன்மைகளுக்கு நன்றி தெரிவிக்கவும் பயனாகின்றன. திருப்பாடல்களின் தொகுப்பில் இவ்வகைத் திருப்பாடல்கள்தான் அதிகமாக உள்ளன. திபா 3!7, 9!13, 16, 17, 22, 23,25!28, 30!32,34!35, 36, 38!42, 51,54!56, 59, 61!64, 69!71, 86, 88, 102, 107, 109, 115, 120,121, 130, 131, 138, 140!143 ஆகியவை தனியாரின் புலம்பல் திருப்பாடல்களாக அறியப்படுகின்றன. தனியார் புலம்பல் பாடல்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவையாவன: தனியார் புலம்பல், தனியார் நம்பிக்கை, தனியார் செய்நன்றி..

**2.3. சமூகப் புலம்பல்:** சமுதாயம் அல்லது நாடு அனுபவிக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்திட கடவுளின் துணையை நாடுதல் சமூகப் புலம்பல் என்றழைக்கப்படுகிறது. அயல் நாட்டவரின் படையெடுப்பு, போருக்குரிய சூழல் , கொள்ளை நோய், பசி, பஞ்சம், பிணி ஆகியவற்றால் ஓர் ஊர் அல்லது ஒரு நகரம், அல்லது நாடு முழுவதும் துன்பப்படும்போது, அத்துன்பங்களை இறைவனிடம் எடுத்து சொல்லி, மக்கள் யாவரும் புலம்புவர். அது அவநம்பிக்கையின் வெளிப்பாடு அல்ல் மாறாக இறைவன் உதவுவார் என்கிற நம்பிக்கையில் செய்யப்படும் முயற்சி அது. இவ்வகைத் திருப்பாடல்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. துன்ப வேளையில் புலம்பல் மூலம் ஒப்படைக்கப்பட்ட செபத்தைக் கடவுள் ஏற்று, மக்களுக்கு நலம் பயப்பார் என்றால், அதற்கு நன்றி தெரிவிப்பதற்கும் இவ்வகைப் பாடல்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. திபா 12, 44, 58, 60, 65!68, 74,77,79,80,82,85,90,106,108, 116,118, 123!126, 129, 137 ஆகிய பாடல்கள் இப்பிரிவைச் சார்ந்தவை சமூகப் புலம்பல் திருப்பாடல்களை சமூகப் புலம்பல், சமூக நம்பிக்கை, சமூகச் செய்நன்றி என்று மூன்று வகையில் பிரிக்கலாம்.

**2.4. அரசப் பாடல்கள்:** மக்கள் தங்கள் அரசரின் பெருமைகளைக் குறித்து மகிழ்ந்து பாடுதல் அரசப்பாடல்கள் ஆகும். இத்திருப்பாடல்களில் அரசரின் நீதி முறை, நிர்வாகத் திறன் போன்றவை சுட்டிக் காட்டப்படுகின்றன. இவ்வகைப் பாடல்களில் அரசர்கள் சம்பந்தப்பட்ட விழாக்கள், அவர்களின் அரியணை ஏறும் விழா மற்றும் திருமண விழா போன்றவையும் சேருகின்றன. திபா 2, 18,20,21,45, 72, 89, 101, 132,144 ஆகிய திருப்பாடல்கள் அரசப் பாடல்களாகக் கருதப்படுகின்றன.

**2.5. அறிவுரைப் பாடல்கள்:** இவ்வகைத் திருப்பாடல்களில் அறிவுரைகள் பெருகிக் கிடக்கின்றன. நல்லவற்றை செய்ய வேண்டும் என்றும், தீயவற்றை ஒதுக்க வேண்டும் என்கிற அறிவுரை இத்திருப்பாடல்களில் அதிகமாய் எதிரொலிக்கும். அறிவுரை பாடல்களை அறிவு கேட்டல், வரலாற்றுப் பாடல்கள், இறைவாக்குப் பாடல்கள், திருழிபாடடுப் பாடல்கள் என்று நான்கு வகையாகப் பிரிக்கலாம். திபா 1, 14, 15, 24, 37, 49, 50, 52, 53, 68, 73, 75, 77, 78, 81, 82, 85, 91, 105, 106, 112, 119, 127!129, 133, 134, 136, 139, 144 ஆகியவை அறிவுரைப் பாடல்கள் என்றழைக்கப்படுகின்றன. இப்பாடல்களில் இறைவனிடம் அறிவையும், ஞானத்தையும் வேண்டிப் பெறுதல், இஸ்ரயேலரின் வரலாற்றில் இறைவன் ஆற்றிய அனைத்து நன்மைகளை நினைத்து, அவருக்குப் புகழ் பாடுதல், இறைவாக்கினர்களின் படிப்பினைகளை அறிவுரைகளாக வழங்குதல் போன்றவற்றைக் காணலாம். – தொடரும்...

# தர்மத்தின் கண்ணாடியே



இன்று தர்மம் என்றவுடனே நம்முடைய நினைவுக்கு வருவதெல்லாம் ஈகைத் திறன் மட்டுமே. அது மட்டுமா தர்மம்? இல்லை. ஒவ்வொரு செயலும் அதற்குரிய தர்மத்தினைத் தன்னுள் கொண்டுள்ளது. அன்னை மரியாள் அத்தகைய பண்புகளையே தன்னுள்ளே கொண்டிருந்தார். தன்னுடைய வாழ்வின் எல்லாச் செயல்களிலும் அவர் தன்னையே முழுமையாக ஈடுபடுத்தி, நிறைவேற்றியதன் மூலம், தன் வாழ்வின் எல்லா செயல்களிலும் தர்மம் காத்தவளாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றார். எனவே, மரியா, தர்மத்தின் தலைகாக்க எந்தெந்த வழிகளிலெல்லாம் தன்னைக் கையளித்தார் என்பதைச் சற்று விவிலியப் பின்னணியோடு உற்றுநோக்குவோம்.

**1. அன்பின் உருவம் மரியா**

"மரியா என்றால் அன்பு; அன்பு என்றால் மரியா." பெண் ஒருவள் குழந்தை உண்டானதும், குடும்பத்திலிருந்து எண்ணிலடங்காப் பாதுகாப்பும் அக்கறையும் அவளுக்கு அதிகமாகக் கிடைக்கும். குழந்தை பெற்றுவிட்டால், அவள் தாய்மையைக் கண்டு குடும்பமே கொண்டாடும். ஆனால், மரியான் இயேசுவைக் கருத்தாங்கியதிலிருந்து இறப்பு வரை துயரமே மரியாவோடு பயணித்தது (மத் 1:19: 2:13 ! 14: யோவா 19:25). அந்தத் துன்பங்களுக்கு மத்தியில் இயேசுவோடு பயணம் செய்யத் தூண்டியது அவரிடமிருந்த அன்புதான். " தனது மகனுக்காக எத்தனை முறை வேண்டுமென்றாலும் இறக்கத் தயார் நிலையில் மரியா இருந்திருக்கக் கூடும்" என்று புனித யூட்ஸ் ( St.John Eudes ) கூறுகிறார்.

அந்தத் தாயிடம்தான் நம்பிக்கையோடு இயேசு நம் அனைவரையும் ஒப்படைக்கிறார் (யோவா 19:26- 27): அடிமைகளாக அல்ல வேலைக்காரர்களாக அல்ல; மாறாக குழந்தைகளாக, " அம்மா, இவரே உம் மகன் " (யோவா 19: 26) அம்மா, இவர்களே உம் குழந்தைகள் அவர்கள் மீதுள்ள அன்பின் மிகுதியால் நான் இரத்தம் சிந்தியதைக் கண்கூடாக நீர் பார்த்துள்ளீர்; " நான் அன்புசெய்தது போல் நீயும் அவர்களை அன்பு செய்வாயா? " என்று இயேசு, " மரியாவிடம் கேட்டிருக்க வேண்டும் . இன்று அன்னையின் அன்பு அகிலத்தையும் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. பொறாமையோ, வெறுப்போ, வஞ்சகமோ, கெட்ட நடத்தையோ, தீய சக்தியோ, வன்முறையோ அன்னையின் அன்பை அழிக்க முடியாது ஏனெனில் அன்னையின் அன்பு இறப்பையும், நரகத்தையும்விட ஆற்றல் வாய்ந்தது " (புனித பீட்டர் தமியான்). இன்று உலகிலுள்ள அனைத்து கிறிஸ்துவ ஆலயங்களில், 60 விழுக்காட்டுக்கும் மேலான ஆலயங்கள் அன்னையின் பெயரில்தான் இருக்கின்றன. இவையெல்லாம் அன்னையின் அன்பிற்கு அகிலம் தந்த பரிசு. இவ்வாறு அன்பு என்ற தர்மத்தால் தலைநிமிர்ந்து நிற்கிறார் நம் அன்னை.

**– தாயே எங்கள் தஞ்சம்**



புனித கிளாரா

# புனித கிளாரா

இளம் வயதிலிருந்தே இவள் தன்னை கடவுளுக்கு அர்ப்பணிக்க விரும்பினாள். பெற்றோர் இவளை திருமனம் செய்து வைக்க தீர்மானித்தார்கள். 1212-ஆம்ஆண்டு தவக்காலத்தில் புனித அசிசி பிரான்சிஸ் இவரது ஊர்க்கோவிலில் மறையுரைகள் நிகழ்த்தினார். துறவியாக வேண்டுமென்று தீர்மானித்து குருத்து ஞாயிறு இரவில் பெற்றோருக்குத் தெரியாமல் புனித பிரான்ஸிசிடம் அடைக்கலம் புகுந்தாள். அவர் இவளுக்குத் துறவற உடை அளித்தார். பெற்றோர் இவளை எங்கும் தேடினர். இறுதியாக அவளைக் கண்டுபிடித்தார்கள். அவளை இழுத்துப் போக பெரு முயற்சி செய்தார்கள். இவள் பீடத்தை இறுகப் பிடித்துக் கொண்டாள். திடீரென அவள் தன் தலையில்இருந்த முக்காட்டை அகற்றினாள். அவளது நீண்ட பொன் மயமான தலை ரோமம் வெட்டப்பட்டிருப்பதை பெற்றோர் கண்டனர் அதிலிருந்து இனி அவள் வரமாட்டாள் என்று அறிந்தார்கள். “ பெற்றோரே என்னை கடவுள் தமது சேவைக்கு அழைத்திருக்கிறார். இயேசுவைத் தவிர வேறு யாரையும் பர்த்தாவாக தேர்ந்தெடுக்கமாட்டேன் ” என்று கூறிவிட்டாள். இவளைக் கொண்டு புனித பிரான்சிஸ் ஒரு புதிய கன்னியர் சபையைத் தொடங்கினார். இதுவரை பெண்கள் அனுசரிக்காத தவமுயற்சிகளையெல்லாம் இந்த சபையினர் அனுசரித்தனர். ஒவ்வோரு நாளும் ஒருசந்தி, உபவாசம், கிளாராவின் தந்தை தாராளமான சொத்துக்களை இவளுக்கு விட்டுச்சென்றார். இயேசுவைப் பின்பற்றி தரித்திரத்தில் வாழ விரும்பிய கிளாரா அனைத்தையும் ஏழைகளுக்கு கொடுத்து விட்டாள். “இவ்வளவு கண்டிப்பான தரித்திர வாழ்வு உதவாது. வருமானம் தரக்கூடிய சொத்துகளை வைத்துக்கொள் ” என பாப்பு மொழிந்தார். இவள் மறுத்துவிட்டாள். “நாங்கள் மிக மிக ஏழைகள் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். கடவுளைக் கொண்டிருப்பவர்கள் ஏழைகள் அல்ல ” என்று இவள் கூறினாள். எதிரிகள் படையெடுத்து வந்தனர். “ஆண்டவரே, உம்முடைய ஊழியர்களாகிய நாங்கள் அவிசுவாசிகளான இவர்களது கையில் அகப்பட்டு அழிவது உமது விருப்பமா? ” என்று மன்றாடினார்.இவளது மன்றாட்டுக்கு கடவுள் செவிசாய்த்தார். எதிரிகள் தீடீரென அச்சம் கொண்டு ஓடி மறைந்தார்கள். “ ஆண்டவரே, உமது பிரியம் போல் என்னை நடத்தும், எனது மனதை நான் உமக்கு அர்ப்பணித்திருக்கிற படியால் நான் உமது சொந்த பொருளாகிறேன். என் மனது இனி என்னுடையது அல்ல ” என்று இவள் அடிக்கடி கூறுவாள்.

**சிந்தனை:** திவ்விய நற்கருணையைக் கொண்டு இவள் எதிரிகளை முறியடித்தாள். அதைப் போல நாமும் திவ்விய நற்கருணையைக் கொண்டு நம் ஆன்மாவின் எதிரிகளை முறியடிக்கலாம்.

**செபம்:** திவ்விய நற்கருணையில் இருக்கிற இயேசுவே, உலகம், அலகை, உடல் இவற்றை முறியடிக்க எனக்கு உதவி செய்யும்.

**– புனிதர்களின் வரலாறு**

(05.07.2014)

# வெற்றிக்கு வழி - தன்னம்பிக்கையே!

"என்ன?, நீங்கள் எடுத்தகாரியம் வெற்றிதானே?"
"ம்...ம்,,,அப்படித்தான் நினைக்கிறேன்...."
"என்ன! இப்படிச் சொல்கிறீர்கள்...!"
"ஆமாம்" என்ற ஒரே வார்த்தையில் உங்களால் திடமான பதில் தரமுடியவில்லை யென்றால் உங்கள் மனோபாவக் கோளாறு தான்.

உங்கள் மனோபாவம் ஆரோக்கியமடைய வேண்டும் என்றால் புது இரத்தம் போல், புதிய எண்ணங்கள் உங்கள் சிந்தனையை வளப்படுத்த வேண்டும். நல்ல சிந்தனைகள் விளைந்தால்தான் அரிய செயல்கள் கிடைக்கும். எந்தச் சாதனைக்கும் ஆணிவேர் உயர்ந்த சிந்தனைதான்.

நம்பிக்கை என்பது ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் ஒரு தீபம் போன்றதாகும். அது தன்னை அணைத்துக் கொள்ளாமல், அணைந்து போன மற்ற தீபங்களையும் ஒளிவிட்டு பிரகாசிக்கச் செய்யும் ஆற்றல் படைத்தது.

உங்களுக்கு எந்தக் காரியத்திலும் வெற்றியடைய வேண்டும் என்கிற எண்ணமுண்டு அதை உங்கள் தன்னம்பிக்கை மூலம் ஒரு முகப்படுத்த வேண்டும். அப்பொழுதான அதில் நீங்கள் அவசியம் வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் நிறையப் படிக்கவேண்டும். சிந்திக்க வேண்டும். பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளை படித்து அவர்கள் எப்படியெல்லாம் வெற்றி பெற்று முன்னேறி வந்துள்ளார்கள் என்பதையெல்லாம் நீங்கள் அறிய வேண்டும். அப்போது தான் உங்கள் நம்பிக்கை விசுவரூபமெடுக்கும்.

நீங்கள் நினைத்தால் உங்கள் வாழ்க்கையை நறுமணம் கமழும் நந்தவனமாகவும் அமைக்கலாம், அல்லது பசுமையற்ற பாலைவனமாகவும் மாற்றலாம். எல்லாம் உங்கள் கையில் தான் இருக்கிறது. உலகம் உங்கள் சிந்தனைகளின் வெளித்தோற்றமே! உங்களது எண்ணங்களில் மலர்வது தான் செயல்! செயலில் கனிவது தான் வாழ்க்கை!!

இது என்னால் முடியும். நான் அவசியம் செய்து முடிப்பேன். என்னால் ஆகாதது உண்டா? என்பன போன்ற முழுமையான தன்னம்பிக்கை உங்களை ஆட்கொள்ளவேண்டும். முடியும் என்று எண்ணும் போது உங்கள் உள்ளமும் எண்ணங்களும் உங்கள் எதிர்காலத்தை நோக்கி இருக்கின்றன.

வாழ்க்கையில் எப்படியும் முன்னேறிச் செல்லவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் நீங்கள் தீவிரமாக உழைப்பீர்களானால், வெற்றி, பயன், ஆற்றல் ஆகிய மூன்றும் - உயரே கொண்டுசெல்லும் மூன்று படிகளாகப் பயன்படும்.

உலகத்தைப் படைத்து, அதை அழகுச் சோலையாக்கி, உயிரினங்களை அதில் உலவவிட்ட இறைவன் - நம்பிக்கை தீப ஸ்தம்பமாக விளங்கி இருண்ட இதயங்களுக்கு ஒளியை வழங்குகிறான் என்பதை மறவாதீர்கள்.

அதனால்தான் இறைவனிடம் பரிபூரண நம்பிக்கை வைத்துள்ளவர்களால், வாழ்க்கைப் பிரச்சனைகளைச் சமநோக்குடன் அணுக முடிகிறது. அது மாதிரியான அணுகுமுறை உங்களுக்கும் ஏற்பட வேண்டும். அதற்கே நீங்கள் பாடுபட வேண்டும்.

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**07-06-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1873 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1402 பேர் |
| சுகப்பிரசவம் | - | 907 பேர் |
| நற்சுகம்பெற | - | 1525 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 824 பேர் |
| தேவஅழைத்தல் | - | 545 பேர் |
| வேலைகிடைக்க | - | 1204 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1514 பேர் |
| குடும்பசமாதானம் | - | 1412 பேர் |
| குடும்பநலன் | - | 918 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 717 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 618 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1043 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1122 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 748 பேர் |
| மனமாற்றமடைய | - | 965 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1044 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 545 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 867 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1042 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 645 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** **- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

8ம் பக்க தொடர்ச்சி....

எந்த காரணம் கொண்டும் நீங்கள் அந்த நம்பிக்கை தீபத்தை அணையவிட்டு விடாதீர்கள். நம்பிக்கையை இழந்தால வாழ்க்கையில்லை. வாழ்க்கை ஒரு சவால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது உங்களை நோக்கி சரம்சரமாக விடும் அம்புகளையெல்லாம், உங்கள் தன்னம்பிக்கைக் கேடயம் கொண்டு அவை உங்கள் மீது பாயாமல் தடுத்துவிட வேண்டும். அது உங்களால் ஆகும். அஞ்சாதீர்கள்.

– **வளர்மதி,** பொற்பை



# பங்கு செய்திகள்

**01:07:14** அன்று மாலை அந்தோனியார் கெபியில் திருப்பிலி நடைபெற்றது.

**02:07:14** அன்று மாலை திருத்தல வளாகத்தில் அமைந்துள்ள லூர்து மாதா கெபியில் திருப்பலி நடைப்பெற்றது.

**03:07:14** அன்று மாலை தாளாளர் தந்தை அவர்கள் தலைமையில் நமது ஊரில் உள்ள மூன்று பள்ளிகளின் ஆசிரியர்கள் கூட்டம் நடைப்பெற்றது.

**04:07:14** அன்று முதல் வெள்ளி திருப்பலிக்கு பின் நோயாளிகளை வீட்டில் சந்தித்து பங்க தந்தை அவர்களால் நற்கருணை வழங்கப்பட்டது.

**05:07:14** அன்று முதல் சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன.

**06:07:14** பங்கு பேரவைக் கூட்டம் நடைப்பெற்றது.

**09:07:14** அன்று காலை திருத்தலத்தில் திருப்பலியும் 9.00 மணிக்கு மூன்று பள்ளி மாணவ மாணவிகளுக்கு சிறப்பு திருப்பலியும் மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலியும் நடைப்பெற்றது.

காலை புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் வைத்து சாஸ்தாவி நல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களால் கடந்த ஆண்டு 12!ம் வகுப்பு பயின்ற மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கப்பட்டது.

**12:07:14** அன்று மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெற்றது.

**13:07:14** அன்று காலை பங்கு தந்தை தலைமையில் ஆலய மண்டபத்தியில் வைத்து சிறப்பு ஊர்ப் பொது கூட்டம் நடைபெற்றது.

**19:07:14** அன்று மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெற்றது.

**26:07:14** அன்று மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெற்றது.

# கன்னிமரியின் விண்ணேற்பு!

ஆகஸ்ட் 15 நம் தாய் தூய கன்னிமரியாளின் விண்ணேற்பு பெருநாள்! கன்னிமரி ஆன்மாவோடும், உடலோடும், விண்ணுக்கு எழுப்பப்பட்ட நாள்! நமக்காக தன் அன்பு மகனிடம் பரிந்து பேசிடவிண்ணகம் சென்ற நாள்! உலகமீட்பர் இயேசுவுக்கு, இணையான மீட்பராக மண்ணுலகில் பெண்ணொருவர் தேர்ந்து கொள்ளப்பட்ட நாள்! " தூய வாழ்வுக்கு கைமாறு உண்டு! மாசற்றவர்களுக்கு பரிசு கிடைக்கும்! " [ சாலமோனின் ஞானம் ! 2:22]!ஆம்! கன்னிமரியின் விண்ணேற்பு, கன்னிமரியின் இறை தூய்மைக்கும், இறை தாய்மைக்கும் இறைவன் தந்த பரிசு! தந்தையாம் இறைவனின் அருளை ஏகபோகமாகப் பெற்று, பரிசுத் த ஆவியின் வல்லமையால் இறைவனின் மகனைப் பெற்றும் கன்னிமை குன்றாமல் அன்னை மரி வாழ்ந்த வாழ்வின் வெளிப்பாடே கன்னிமரியின் விண்ணேற்பு! மண்ணுலகில் பெண்ணாய் பிறந்த அனைவருக்கும் தாய்மைப் பேறு என்பது உலக இயல்பு! ஆனால் இந்த பேற்றை தரும் இறைவனுக்கே தாயாகும் பேறு பெற்றவர் தான் அன்னை மரியாள்! இந்த தாய்மைப் பேற்றை இறைவனின் மீட்புத் திட்டத்திற்காகத் தியாகம் செய்ததால், அன்னை மரியாளுக்கு இறைவன் தரும் மாட்சிமை மற்றும் கைமாறு தான் அன்னை மரியாளின் விண்ணேற்பு! அன்னை மரியாளின் இந்த மாசற்ற இறை தூய்மையையும், இறை தாய்மையையும் திருச்சபை தியானித்து வணங்குகிறது! அன்னை மரியாளுக்கு இணை மீட்பர் பட்டம் வழங்கி மகிமைப் படுத்துகிறது.

**தூய யோவானின் சாட்சியம்**

இயேசுவின் விண்ணேற்புக்கு பின் சீடர்களோடு வாழ்ந்து வந்த அன்னை மரியாள் இறந்து, அடக்கம் செய்யப்பட்டபோது, பன்னிரு சீடர்களில் ஒருவனான தோமையார் உடன் இருக்கவில்லை! தோமையார் திரும்பி வந்த உடன் என் ஆண்டவரின் தாய், மரியாளின் உடல் மண்ணோடு மண்ணாக அழுகிபோவதற்கு முன் நான் அவரைக் காண வேண்டும் என்று, பக்தி பரவசத்துடன் அழுது முறையிட்டு, மூடப்பட்ட கல்லறையை திறந்து காட்டும் படி அடம்பிடித்ததால் கல்லறை திறக்கப்பட்டது. அங்கே அன்னை மரியாளின் உடல் காணப்படவில்லை. பூக்கள் மட்டுமே கிடந்தன, அன்னை மரியாள் ஆன்மாவோடும், உடலோடும் விண்ணுக்கு எழுப்பப்பட்டார் என்று அன்று முதல் இன்று வரை விசுவசித்து வருகிறோம். மேலும் தூய யோவான் அன்னை மரியாள் விண்ணுக்கு சென்றதை தான் நேரில் கண்டதாகவும், விண்ணக வாசலில் இயேசு தம் தாயை எதிர்கொண்டழைத்ததாகவும் சாட்சியம் கூறுகிறார். இதனை பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப்பின் போப் 12ம் பத்திநாதர் விசுவாச அறிக்கையாக பிரகடனம் செய்தார். அன்று முதல் விண்ணேற்பு அன்னை ஆலயங்கள், உலகம் முழுவதும் எழுப்பப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15ம் தேதி அன்று விண்ணேற்பு அன்னைக்கு விழா எடுக்கப்படுகிறது.

நமது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை இந்த நம்பிக்கையும், விசுவாசமும் தான்! எந்த நிலையிலும் இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்ந்தவர் அன்னை மரியாள். நாமும் இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்ந்தால், அன்னை மரியாளை மாட்சிமைப்படுத்திய இறைவன் நம்மையும் தனது விண்ணகக்கொட்டிலில் சேர்த்துக்கொள்வோம் என்ற தொடர் நம்பிக்கையோடும் , விசுவாசத்தோடும் வாழ்வோம்.

**– ம.மிக்கேல் உஷா,**
பொற்பை.

# திருச்சபைச் செய்திகள்

முனைவர் அருட்திரு. R.ஜோசப் ரவி பாலன்

**1) திருத்தந்தையின் கொரியா பயணம்:**

ஆகஸ்டு 14ஆம் நாள் திருத்தந்தை ஃபிரான்சிஸ் தென் கொரியாவிற்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். ஆகஸ்டு 18 ஆம் நாள் வரை அவர் அந்நாட்டில் இருப்பார். திருச்சபையின் தலைவராகத் தேர்தெடுக்கப்பட்ட பிறகு இது அவரது மூன்றாவது வெளிநாட்டுப் பயணம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசியாவில் நடைபெறும் ஆறாவது உலக இளைஞர் தினத்தில் கலந்துகொள்வதற்காகவும், மறைச்சாட்சிகளாய் இறந்த 124 கொரியர்களுக்கு முத்திப்பெற்று பட்டம் வழங்குவதற்காகவும் அவர் தென் கொரியாவிற்குச் செல்கிறார்.

**2) வத்திக்கான் வங்கியின் புதிய மேலாளர்:**

வத்திகான் ஒரு சிறிய நாடு என்பதும், திருத்தந்தையே அதன் தலைவர் என்பதும் நாம் அறிந்ததே. 1942 ஆம் ஆண்டிலிருந்து உரோமை நகரில் ஒரு பகுதியில் அமைந்துள்ள வத்திக்கானில் ஒரு வங்கி இயங்கி வருகிறது. பொதுவாக அது ‘வத்திக்கான் வங்கி’ என்று அழைக்கப்பட்டாலும், அதன் உண்மையான பெயர் ‘சமய வேலைகளுக்கான நிறுவனம்’( **The Institute for Works of Religion**). பல ஆண்டுகளாகவே அந்த நிறுவனம் பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. நிறைய தவறுகள் நடந்தன என்றும், ஊழல்கள் நிறைந்திருந்தன என்றும் புகார்கள். மாஃபியா என்கிற பிரபல பன்னாட்டுக் கொள்ளைக் கூட்டத்தினர்கூடஇந்த நிறுவனத்தை இரகசியமாகப் பயன்படுத்தி, தங்கள் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கினர் என்றும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது. நிருத்தந்தை பதினாறாம் பெனடிக்டு இந்த நிறுவனத்தைச் சீர்திருத்திட பல நடவடிக்கைகளை மேற்கொண்டு, சந்தேகத்திற்குரிய பலரது வங்கிக் கணக்கை நிறுத்தினார். தற்போது திருத்தந்தை ஃபிரான்சிஸ் அவர்களும் பல முயற்சிகளைக் கையாண்டு வருகிறார். இந்நிறுவனத்திற்கு ஃபிரான்சு நாட்டைச் சேர்ந்த ஜான் பேப்டிஸ்ட் தெ ஃபிரான்ஸ்ஸு ( **Jean-Baptiste de Franssu** ) என்கிற 51 வயதாகும் தொழிலதிபர் மேலாளராக நியமிக்கப் பட்டுள்ளார். புதிய மேலாளரின் கீழ் இந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்படும் என்று நம்புவோம்.



### 3) புண்ணிய பூமியில் சமாதானம் நாடி திருத்தந்தையின் அழைப்பு:



ஜுலை 8ஆம் நாள் இஸ்ரயேல் காசா பகுதியின்மேல் ஆகாய வழித் தாக்குதல் நடத்தியதில் குழந்தைகள் உட்பட சுமார் 150 பேர் கொல்லப்பட்டனர். எருசலேம், டேல் அவிவ் ஆகிய நகரங்கள் மீது 'ஹமாஸ்' இயக்கத்தினர் ராக்கெட்டுக்கள் வீசி சேதம் விளைவித்ததற்குப் பதிலடியாக இஸ்ரயேல் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே ஜுன் மாதத்தில் 20 வயதிற்குட்பட்ட மூன்று இஸ்ரயேலரை ஹமாஸ் இயக்கம் கடத்திச் சென்று கொன்றது என்று இஸ்ரயேல் கோபத்தில் இருந்தது. அருபுறத் தாக்குதலினால் பதற்றம் தொடர்கிறது. இந்த சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிப்பவர்களுக்கும், பிற நாட்டுத் தலைவர்களுக்கும் சமாதானம் நாடி திருத்தந்தை ஃபிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

### 4) கத்தோலிக்கர்கள் ! ஆங்கிலிக்கன் சபை இடைவெளி பெருகும் அபாயம்?

இங்கிலாந்து திருச்சபை ( The Church of England ) ஆங்கிலிக்கன் திருச்சபை (The Anglican church) என்றும் அழைக்கப்படுகிறது. இந்த சபைக்கும் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் இடையே சுமுகமான உறவு இருந்து வந்திருக்கிறது. இறையியல் கொள்கைகள் மற்றும் விசுவாசக் கோட்பாடுகளின் அடிப்படையில் நோக்கினால் இரண்டு சபைகளுக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் இல்லை. ஆங்கிலிக்கன் திருச்சபையில் பெண்களுக்குக் குருப்பட்டம் வழங்கப்படுகிறது. அது ஒன்றுதான் நமக்கு நெருடலாக இருந்தது. ஆனால் இப்போது பெண்களை ஆயர்களாய் நியமிக்கலாம் என்று ஆங்கிலிக்கன் சபையின் உயர்மட்டக் குழு தீர்மானித்துள்ளது. அவர்களின் தீர்மானம் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் உறுதி செய்யப்பட்டால், அந்த சபையில் பெண்களும் ஆயர்களாய் நியமிக்கப்படுவர். அதன் காரணமாக அந்த திருச்சபைக்கும் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் இடையே இருக்கும் இடைவெளி பெரிதாகலாம் என்று அஞ்சப்படுகிறது.



# ஆண்டவரின் வழியில் அறிவியல்

மனிதனின் அறிவு பெருகிவிட்டது. ஒவ்வொரு நாளும் புதுப்புது அறிவியில் கண்டுபிடிப்புகள் வந்து குவிகின்றன. பல துறைகளில் அறிவியல் ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. இத்தகைய புதிய கண்டுபிடிப்புகள் யாவும் இறைவன் நமக்கு அளித்த கொடை என்ற உணர்வு மனிதனின் உள்ளத்தில் எழ வேண்டும். புதிய புதிய கண்டுபிடிப்புகள் யாவும் இறைவனின் புகழ் வாங்கவும், அவரது பாதையில் நாம் நடக்கவும் நமக்கு உதவும் கருவிகளாக பயன்படவேண்டும்.

மேதைகளும் ஞானிகளும் ஆண்டவரை அறிந்து கொள்ளாவிட்டால் மூடர்களாகவே கருதப்படுவார்கள். எத்தனையோ ஞானிகள் ஆண்டவரால் வழிநடத்தப்பட்டு ஞானம் பெற்று தம் அரிய கண்டுபிடிப்புகளை உலகிற்குத் தந்தார்கள். புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு புதியவனவற்றை கண்டுபிடிக்க முயன்ற பலர் ஆண்டவரின் அருளைப் பெறாமல் தோல்வி அடைந்துள்ளனர். ஆண்டவரின் உதவியை நாடி உழைத்தவர்கள் தம் கண்டுபிடிப்பில் வெற்றியடைந்த வரலாறு அநேகம் உண்டு.

பெட்ரோலியத்தை பகுத்து வடிக்கும்போது கிடைக்கும் ஒரு வேதிப்பொருள் பென்சீன் எனப்படும். பென்சீன் தொழில் துறையில் மிக அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. பென்சீன் சிறந்த பொருளாகவும் கரைப்பானாகவும் பயன்படுத்தப்படுகிறது.

பென்சீனைப் பற்றி ஆராய்ந்த கெக்குலே என்ற விஞ்ஞானி, பென்சீனின் அமைப்பை உலகிற்கு சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்துடன் தனது ஆராய்ச்சியை மேற்கொண்ட அவர் பென்சீனுக்கு பலவிதமான நேர்கோட்டு அமைப்பு மற்றும் கிளை அமைப்புகளை கொடுத்தார். எதுவுமே அதற்கு பொருந்தவில்லை. எந்த அமைப்பையும் அவரால் நிரூபிக்க இயலவில்லை.

இந்தச் சூழ்நிலையில் ஒரு நாள் இரவு அவர் கவலையுடன் இறைவனை வேண்டி மன்றாடி, ஆண்டவரின் உதவி எப்படியும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தன் ஆராய்ச்சிக் கூடத்திடிலேயே தூங்கிவிட்டார். இரவு அவருக்கு ஒரு கனவு வந்தது. கனவில் ஒரு பாம்பு தன்னுடைய வாலை தானே கடித்துக்கொண்டு கிடந்தது.

இந்தக் கனவைக் கண்ட உடனே கெக்குலே திடுக்கிட்டு விழித்தெழுந்தார். கனவில் பாம்பு வளையம்போல் கிடந்தால் பென்சீனுக்கும் வளைய அமைப்பு இருக்கும் என்ற ஐயத்துடன் அந்த அறையின் ஜன்னலை திறந்தார். வெளியே தோட்டத்தில் நின்ற ஒரு ஓக் மரத்தில் ஆறு குரங்குகள் ஒரு அறுங்கோண அமைப்பில் அமர்ந்து இருந்தன. அதைக்கண்ட கெக்குலேவிற்கு தீடீர் ஞானம் பிறந்தது.

பென்சீனிலும் ஆறு கார்பன் அணுக்கள் அருங்கோண வடிவில் அமைந்துள்ளன என்ற கருத்தின் அடிப்படையில் ஆராய்ச்சியை தொடர்ந்து வெகுவிரைவில் பென்சீன் ஒரு அறுங்கோண வளையம் என்பதை நிரூபித்தார்.

இறைவன் எனக்கு மறைமுகமாக உதவியிருக்காவிட்டால் என்னால் பென்சீனின் அமைப்பை கண்டுபிடித்திருக்க இயலாது என்று தனது இறுதி மூச்சு உள்ள வரை இறைபுகழ் பாடினார் விஞ்ஞானி கெக்குலே

– T.**பீட்டர் அந்தோணி** ஆசிரியர்.



# விண்வெளி ஒன்று உதித்தது

பரிசுத்த அன்னை மரியாள். அகிலத்திலும் போற்றப்பட வேண்டும் என வானதுதர் அருள்நியை மரியே வாழ்க என உரைத்தார். இயேசு பாலனை பெத்லேகமில் பெற்றெடுத்தார். அருள்நிறை மரியே என ஜெபிப்பதில் பேரானந்தம் அடைவார். பொ ற்பை மாநகரில் குன்றின்மேல் அமையப் பெற்றார்.

ஏகமகனோடு பல புதுமைகள் பொழிய இருப்பிடமாக கொண்டாள். கஷ்டம் கவலை கடன் தீர ஒடோடி வரும் பக்தர்களை கருணை கொள்வார். அம்மா, அம்மா என நெஞ்சுருகி கண்ணீர் விடுபவனுக்கு புதுமைகள் தந்திடுவார். ஒவ்வொரு சனியும் திருவிழா கோலமானதே. ஒளி சுடரும் மெழுகுவர்த்தியும் மண்ணில் தவழும் நட்சத்திராமாக மின்னி ஜொலிக்கும் தெருவீதியும் ஒளிவீசுகிறதே. சிங்கார தேரில் அருள் மயமாக வந்தமர்வார். ஜெபகீதங்களில் மகிழ்ந்திடுவார். ஏக்கங்களோடு மனபாரத்தோடு வருபவரை ஆலயமணியும் ஒலி கொண்டு அழைத்திடுதே,

திருமறைக்கும் ஆராதனை துதிகளும், திருபலிகளும் பக்தர்கள் மனதில் அமைதி பெற சிறப்பு ஆனதே. அடுப்பில் எரிக்கின்ற அணையா நெருப்பும் பொங்கி பொங்கி சாகின்ற சோறும் அள்ள அள்ளக் குறையாத குவியலானதே ஓராயிரம் மக்கள் பசியாற்றிட அன்னதானங்களும், அசனங்களும் மாதாவின் சிறப்பை எடுத்துரைக்கின்றதே. பொற்பை மாநகரில் கரை காணா அதிசயங்களுக்கு குறையில்லை. புண்ணிய பூமியில் பூத்துக் குலுங்கும், புதுமைகள் ஏராளம். விண்வெளி இறைவனால் தந்த ஒளி ஆண்டவரின் தாயாக வந்த ஒளி. நம் பாதைக்கு விளக்காக வந்த ஒளி. திருக்கல்யாண தாயாக உதித்த ஒளி புண்ணிய பூமியானதே அருள்நிறை மரியே வாழ்க.

– **செல்லம்மாள்,** பொற்பை

# அறிவிப்பு

இந்த மாத முதல் சனி உணவு நன்கொடை, மதிய உணவு வரவு செலவு விபரம், பொங்கல் மற்றும் ரசனா வழங்க நன்கொடை வழங்கியவர்கள் விபரம் தனியாக அச்சிடப்பட்டு திருத்தல அறிவிப்புப் பலகையில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். மேலும் திருக்கல்யாணத்தாய் மாத இதழின் சந்தாதாரர்களாகிய பங்கு மக்களுக்கு மாத இதழோடு தனிப்பிரதியாக இணைத்து தங்கள் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்.

தனிப்பிரதி கிடைக்கப் பெறாதவர்கள் பங்கு அலுவலத்தோடு தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**–பங்குத் தந்தை**

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

பொத்தக்காலன் விளை

**மாணவ மாணவியருக்கு சீருடை, நோட்டு புத்தகம் வழங்கும் விழா**



பொத்தக்காலன் விளை பங்கு புனித வின்சென்ட-தே-பவுல் சபை உபகார அன்னை கிளைச்சபை சார்பாக பள்ளி மாணவர்களுக்கு உதவி வழங்கும் விழா 23.06.2014 அன்று காலை 10.00 மணி அளவில் பங்குத்தந்தை அருட்திரு. ஜோசப் ரவிபாலன் அடிகளார் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. அன்று எமது சபைகளிலிருந்து ஏழை மாணவ, மாணவிகளுக்கு சீருடைகளும், நோட்டுப்புத்தகங்களும் வழங்கப்பட்டன. இவ்விழாவில் புனித வளானார் பெண்கள் தொடக்கப்பள்ளியின் தலைமையாசிரியை அருட்சகோதரி மிக்கேல் அம்மாள் அவர்களும் புனித மரியன்னை ஆண்கள் துவக்கப்பள்ளியின் தலைமையாசிரியை திருமதி.சாத்தாதேவி அவர்களும் மற்றும் முப்பள்ளியின் ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள். இவ்விழாவில் புனித மரியன்னை ஆண்கள் துவக்கப்பள்ளியில் பயிலும் 15 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது. மேலும் புனித வளனார் பெண்கள் துவக்கப்பள்ளியில் பயிலும் 20 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 29+3=32 மாணவ மாணவியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. மேலும் 27 மாணவ மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் எமது சபை மூத்த உறுப்பினர்கள் திரு.சிங்கராயன், திரு.பிரான்சிஸ், திரு.ராஜேந்திரன் மற்றும் சபை உறுப்பினர்கள் திரு.பெலிக்ஸ், திரு.அருண் வினோத், திரு.ஜஸ்டின், திரு.ஜேம்ஸ், திரு.ஈஸ்டர், திரு.ஜெகதீஷ். திரு.வர்கீஷ், திரு.வளன், திரு.செல்வன்ராஜா, ஜெயந்தி, ஜெனிபா அந்தோனி மெர்சி, கிங்ஸ்சிலின், ஜெரோஸ், பாத்திமா ஆகிய அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**– வின்செந்தியன்**

# நற்கருணையைப் பற்றி

# புனிதர்கள் கூறியவை



நற்கருணையில் உம்முடைய உண்மையான பிரசன்னத்தை நான் சந்தேகிப்பதில்லை. அவர் வாழ்ந்தபோது நான் நானில்லை என்று ஏங்கி அந்த ஏக்கத்தை என்னிடம் வெளிப்படுத்தியவர்களை கண்டு நான் பரிதாபப்படுகிறேன். காரணம் இந்த உயிருள்ளள நற்கருணையில் உம்மை நான் மெய்யாகவே பெற்றுக் கொள்கிறேன். இதை விட மேலானது வேறென்ன வேண்டும் எனக்கு.

**– அவிலா தெரசா.**




என் முன்னால் வானதூதரும், ஒரு பாவப்பட்ட குருவும் வந்தால் முதலில் குருவின் கையை முத்தமிடுவேன், காரணம் அவை இறைவன் இயேசுவை தொட்ட கரங்களுக்கு உரியவர். குரு என் ஆன்மாவின் ஒவ்வொரு துளியிலும் நற்கருணை நாதருக்கான அன்பு பொங்கிவழிகிறது. **– அசிசி. பிரான்சிஸ்**



உருகிய இரு மெழுகு துண்டுகள் ஒன்றோடு ஒன்று ஐக்கியப்படுவது போல் நற்கருணை உட்கொள்பவரும், நற்கருணை நாதரும் சங்கமித்துவிடுகிறார்கள்.


**– அலெக்ஸாண்டிரியாவின் சிரில்**

தம்முடைய மணமகளாகிய திருச்சபைக்காக என்றும் தம் பிரசன்னத்தைக் கொண்டாட என்றும் தாம் வாழும் இவ்வுன்னத மிகவும் புனிதமான திருவருட் சாதனத்தை கிறிஸ்து விட்டுச் சென்றார். இதன் மூலம் அவருக்கும், அவளுக்கும் இடையேயான ஒப்பந்தம் என்றும் உயிருள்ளதாக இருக்கும்.

– பீட்டர் அல்கொண்ட்ரா



தம்முடைய அன்பின் மீட்பர், அவருடைய வாழ்வில் கடைசி இரவில் மனிதர் மீதிருந்த அன்பிற்காக இறப்பதை அறிந்து தம்மை தனிமையாய் விட்டுவிட மனதில்லாதவராய் தம்மை முழுவதுமாய் நமக்காக உணவாக பலி பீடத்தின் திருவருட்சாதனத்தில் விட்டுச்சென்றார். தம் அன்பை வெளிப்படுத்த வெறெதை செய்ய முடியும். **– அல்போன்ஸ் லிகோரியார்**




புனித நற்கருணை அன்பின் திருவருட்சாதனம். கடவுள் தரும் மேலான அன்பின் அடையாளம். அறிகுறி.

**– தாமஸ் அக்குவின்.**



அளவற்ற அன்பின் மிகுதியால் நற்கருணை வழி எல்லா ஞானமும் மிகுந்தவர், நம்மில் ஐக்கியமாகிப்போனார்.

**– லாரன்ஸ் ஜஸ்டினியன்**



ஆன்ம உணவாகும் அளவுக்கு தம்மை அளித்துக்கொண்ட கிறிஸ்து விசுவாசமுள்ள கிறிஸ்தவரில் இரண்டற இணைந்து கலநது விடுகிறார். **–பிரான்சிஸ் சவேரியார்**


John Chrysostom

எடுத்து உண்ணுங்கள் இது என் உடல் என்றபோது என்னை உண்ணுங்கள் அப்போது எனக்குள்ளும் உனக்குள்ளும் உயர்ந்த சங்கமம் ஏற்படுகிறது. **–ஜாண் கிறிசோஸ்தம்**



ஓ கடவுளே நீர் விண்ணில் இறைவனின் வலப்புறத்தில் அமர்ந்திருப்பது போல அப்ப ரசத்தில் வீற்றிருக்கின்றீர். இந்த அளவிட முடியா ஆச்சர்யத்தை நான் கொண்டிருப்பதால் நான் வேறு எதற்கும் ஏங்கவோ, வேறு எதையும் அடையவோ விரும்பவில்லை.

**– பெட்சி மரிய மதலேனா**

தொகுப்பு : **சகாய ஜெனிலா,** பொற்பை



# அருள் தரும் இமயமே!

அருள் தரும் இமயமே!
ஆசிர் வழங்கும் உன்னதமே!
இறைஅருள் தரும் வானகமே!
ஈகையோடு வாழவரம் தாருமே!
உம்மை காணவரும்
பக்தர்களின் அலங்காரமே!
உலகைக் காக்கும் உன்னதமே!
என்றும் அனைவரின் தாரகையே!
ஏமாற்றம் தராமல் நேரில் வாருமே!
ஐயம் இன்றி வாழ அருள் புரிபவளே

– D.**ஸ்டெபி,** பொற்பை

# சுதந்திரத்தை கொண்டாடுவோம்

விழித்தெழு மனிதா ......
விடியலை நோக்கிய
தினம் வந்து விட்டது
அன்றைய தினம் ஆனந்தமாய்!
விழித்தெழுந்தால் .......
இமயமும் உனக்கு துரும்பு
முடங்கிக் கிடந்தால்
கண் இமையும்
உனக்கு இரும்பு
சுதந்திர நாட்டைக் காக்க
சுமை கருதாமல்
சுகமாய் ஒன்று சேர்ந்து
கொண்டாடுவோம் ......
சுதந்திர திருநாளை
சுதந்திரமாக ........ !

– **டே. நிஜிதா,** வெள்ளக்கோவில்



# அருள்தரும் இமயம் திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1 குழந்தை பாக்கியத்திற்கு நன்றி – **தினேஷ்குயின்** (கேசவன் புத்தன்துறை)

2 மருத்துவ படிப்பிற்கு இடம் கிடைத்தற்கு நன்றி– **கவி** (கோட்டார்)

3 திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – **எட்வர்ட்லாரன்ஸ் குடும்பத்தார்** (பொற்பை)

4 தொண்டை கட்டி குணமடைந்ததற்கு நன்றி – **சலோமி** (கொல்லங்கோடு)

5 வேலை கிடைத்ததற்கு நன்றி – **ஆ. அனிஸ்** (நாகர்கோவில்)

6 இல்லம் அமைந்ததற்கு நன்றி – **ஜெனி** (நாகர்கோவில்)

7 அறுவை சிகிச்சையின்றி நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – **அஜிஸ்** (கேரளா)

8 அன்னை தந்த குழந்தை வரத்திற்கு நன்றி – **அமுதா** (கண்டன்விளை)

9 விபத்திலிருந்து உயிரை காத்த அன்னைக்கு நன்றி –**ஜெலின்டினோ**

10 சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி – **சுபதா** (நீரோடி)

11 வெளிநாட்டு வேலை கிடைத்ததற்கு நன்றி – **பிரஸ்டின்** (வாரனாசி)

12 +2வில் நல்ல மதிப்பெண் பெற்றதற்கு நன்றி – **அபிசன்** (ஹேலன் நகர்)

13 நினைத்த வேலை நல்ல வரன் கிடைத்ததற்கு நன்றி – **எட்வின்** (அழகை)

14 வயிற்றில் வளர்ச்சியில்லாத குழந்தை நன்கு வளர்ச்சி அடைந்ததற்கு நன்றி – **மெர்லின்** வாடிவிளை

15 பிரச்சனையில் இருந்த பணம் வந்து சேர்ந்தமைக்கு நன்றி – **மணிமொழி** (உவரி)

16 குழந்தை வரத்திற்கு நன்றி – **கிங்சன் ஆா** (உவரி)

17 வெளிநாட்டு விா கிடைத்தமைக்கு நன்றி – **லிவின்** (கேரளா)

18 தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றமைக்கு நன்றி – **விஜில்டா** (கோவளம்)

19 நினைத்த காரியம் நடத்தமைக்கு நன்றி – **ஜாண்சன்** (பொழியூர்)

20 கண்பார்வை ?டைத்தமைக்கு நன்றி – **சனிஜா** (மரியாடு)

21 சுகப்பிரசவத்தில் ஆண்குழந்தை தந்த அன்னைக்கு நன்றி – **பாக்யெராஜ்** (வடக்கு அச்சம்பாடு)

22 தலைவலிருந்து நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – **ஆ.ராணி** (பொற்பை)

23 வழக்கில் பெற்றி கிடைத்தமைக்கு நன்றி – **ரீகன்** (குதிரை பந்தி விளை)

24 ஊதிய உயர்வு கிடைத்தமைக்கு நன்றி – **ரெபேக்காள்** (மணவை)

25 வேலையில் இருந்த தொந்தரவுகளை நீக்கி தந்த அன்னைக்கு நன்றி –**சிபோரிலியா** (தூத்துக்குடி)

# கவிதைச் சோலை



## இந்தியா ஒளிர...

இளைஞனே!
அஹிம்சை சத்யாகிரகம்
அறவழிக்கு
நீ மகாத்மாவாக இரு
ரோஜாவைப் போல் மென்மையான
குழந்தை மனதிற்கு
நீ நேரு மாமாவாக இரு
கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுக்கு
நீ அண்ணாவாக இரு
அன்பு, மனித நேயம், அரவணைப்புக்கு
நீ அன்னை தேரசாவாக இரு
இவைகளை உன் உள்ளத்தில்
நிலை பெறச் செய்
உன் உன்னதமான படைப்பால்
விந்தைகள் பல செய்
இந்தியாவை ஒளிரச் செய்

– **D. ஜெர்லின் டேவிட்** பொற்பை

## எண்ணங்களை செயலாக்கு

உளிகள் தோற்றுப் போனால்
சிற்பங்கள் இல்லை
வண்ணங்கள் தோற்றுப் போனால்
வானவில் இல்லை
உண்மை தோற்றுப் போனால்
நீதி இல்லை
உதயங்கள் தோற்றுப் போனால்
இதயங்கள் இல்லை
எண்ணங்கள் தோற்றுப் போனால்
வெற்றி என்பதே இல்லை
எண்ணங்களை செயலாக்கு
வெற்றி என்பதை இலக்காக்கு

–**M. செல்வமேரி,** பொற்பை

## வாழ்க்கை

பொன் நகையை
சுமப்பதல்ல வாழ்க்கை
புன்னகையை சுமப்பது வாழ்க்கை
பணத்தில் நிறைவு
காண்பதல்ல வாழ்க்கை
மனத்தில் நிறைவு காண்பது வாழ்க்கை
தனித்து வாழ்வதல்ல வாழ்க்கை
தனித்தன்மையுடன்
வாழ்வதுவே வாழ்க்கை
சலித்து வாழ்வதல்ல வாழ்க்கை
சாதித்து வாழ்வது தான் வாழ்க்கை
வரலாறு படிப்பதல்ல வாழ்க்கை
வரலாறு படைப்பதுவே வாழ்க்கை

– **டே.நிஜிதா,** வெள்ளக்கோவில்.

# சுதந்திர காற்று



பலரின் தியாகம், பலரின் மரணம்,
பலரின் வீரம், பலரின் பொறுமை,
பலரின் ஏக்கம், பலரின் விடாமுயற்சி,
பலரின் பிரன்பு.........
இவற்றின் விளைவாக கிடைத்தது
இந்த ஆகஸ்ட் 15.
அன்று பாடுபட்டு தியாகிகள்
வாங்கி தந்த சுதந்திரம் இன்று
தொடராதா காரணம் என்ன?
அன்று பற்றியெறிந்த சுதந்திர தீ
இன்று அணைந்து போனதன்
காரணம் என்ன?
அன்று உசுப்பிவிட்ட சுதந்திர காற்று இன்று
வீசாததன் காரணம் என்ன?
அன்று பலரில் காணப்பட்ட தியாக, வீரம்,
பொறுமை, ஏக்கம், விடாமுயற்சி, பிரன்பு
இன்று ஒரு சிலரில் கூட
இல்லாமல் போனதுதான் காரணம்
இன்று எத்தனையோ ஆகஸ்ட் 15 வந்துபோகிறது.
ஆனால் சுதந்திரம் இல்லாமல்
இந்நிலை தொடர வேண்டாம்
நாட்டை மதிப்போம்
நாட்டு மக்களை நேசிப்போம்
மகாத்மாவாக நாமும் மாறுவோம்
சுதந்திர காற்றை சுவாசிப்போம்
பிறரையும் சுவாசிக்க அனுமதிப்போம்

– **அருட்சகோதரிகள்,**
பொற்பை.

# கல்வி

மாணவனே .......
கல்வி என்பது உன் வாழ்க்கை
அதை இழந்து விடாதே
கல்வி என்பது உன் உயிர் மூச்சு
அதை நிறுத்தி விடாதே
கல்வி என்பது உன் அறிவு
அதை தொலைத்து விடாதே
கல்வி என்பது உன்
தாய் தந்தையின் ஆசை
அதை சீரழித்து விடாதே

– **டே. கீர்த்திகா,** வெள்ளக் கோவில்

# தொடர்ந்து போராடு

முயற்சி செய்யாத எந்த மனிதனும்
முன்னேருவதில்லை
வலியில்லாம சாதிக்க முடியாது
வேதனையில்லாம
சாதனையில்ல முடியாது என்பது
முட்டாளின் பேச்சு முடியும் என்பது
முன்னேறு பவனின் மூச்சு
அடிவாங்கட்டும்
கற்கள் சிற்பமாகும் வரை


–F.**ஆன்லி,** பொற்பை

# இயேசு இதயம் குத்தியவன் வேதசாட்சி ஆனார்

**ஜூன் மாதம் இயேசுவின் திரு இதயம் கொண்டாடிய நமக்கு ஊடுருவ குத்தியவரை உற்று நோக்குவர் என்ற மறைநூல் வாக்கும் தெரியும். ஈட்டியால் குத்தியவரை (யோ 20:34)**

**<u>உற்று நோக்குவோம் வாரீர்</u> (நம் திருச்சபை பிறப்பு அன்று தான்)**


**இந்த ரோமை செந்தூரியன் பெயர் <u>லோஞ்சினால்</u> இவர் லான்ஸியானா நகர் (இத்தாலி) சேர்ந்தவர் குறை பார்வை உடையவர் கிறிஸ்துவின் இரத்தம் தொய்ந்த தனது கைகளாள் கண்களை தொட்டதும் முழுபார்வை அடைந்தார். இதன் காரணமாக <u>மனம் மாறி கிறிஸ்துவராகி சீற்றி என்ற இடம் வேதசாட்சியாக மரித்தார்</u> சீற்றியில் இவர் புனித பண்டம் பாதுகாக்கப்படுகிறது. இவர் சொந்த ஊரான லானஸியானாவில் கி.பி 13வது நூற்றாண்டில் நற்கருணை புதுமை நடந்துள்ளது.**




**(ஆதாரம் நற்தருகள் உண்மை சரீரம் நூல்)**

**–ராஜா பிரரேயிர், சென்னை.**

# ஒரு வரி உண்மைகள்









**1. குதிரை எப்போதும் ஒரு குட்டிதான் போடும்.**

**2. நாய்களில் ஒரு சிலவே உடலில் ரோமம் இல்லாதவை.**

**3. தீப்பறவைகளில் ஆணும் அடைகாக்கும்.**

**4. பூனை இரையை அப்படியே விழுங்கும்.**

**5. மனிதக் குரங்கு இனத்தில் சிறியது கிப்பன்.**

**6. பெங்குவின் இறக்கையை நீந்தப் பயன்படுத்துகிற**

**7. நீர் யானை மனிதரை விட வேகமாக ஓடும்.**

**8. பெண் சிங்கம்தான் வேட்டையாடும்.**

**9. புலி சிங்கத்தைவிட உடல் வலிமை கொண்டது.**

**10. கார்ப் மீனின் ஆயுள் ஐம்பது வருடம்.**


**–மேரி, பொற்பை.**

# குட்டீஸ் கார்னர்





டியர் குட்டீஸ், கடந்த மாத புதிர் விளையாட்டுகள் பிடித்திருந்தது என்று நிறைய குட்டீஸ்களிடமிருந்து நன்றி மடல்கள் வந்திருந்தது. இந்த வாரமும் அதே போன்று இரண்டு புதிர் விளையாட்டுகள் இடம் பெற்றிருக்கின்றன. முயற்சி செய்யுங்கள்... புதிரை விடுவியுங்கள்...

– M.**எல்ரோய் ராயன்,** மும்பை.




**10 வித்தியாசங்கள்**



மேலே உள்ள இரண்டு படங்களுக்கிடையே 10 வித்தியாசங்கள் உள்ளன. வழக்கம் போல 60 செகண்டுக்குள் கண்டுபிடியுங்கள்.

கீழே உள்ள படத்தில் உள்ளே நுழைந்து வெளியே வரவேண்டும். இதில் நீங்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய நேரம் வெறும் 30 செகண்டுகளே! **Come on! START**





# எனது கிராமம்

– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ:நாடு மெர்க்கண்டைல் வங்கி)

பொத்தக்காலன்விளையில் எழுந்தருளியுள்ள திருக்கல்யாணமாதாவின் ஆலயம் திருததலமாக அறிவிக்கப்பட்டிருப்பது எனக்கு பெருமையாக இருக்கிறது. காரணம் நான் பிறந்து வளர்ந்து ஓடி, ஆடி விளையாடி என்னுடைய இளமைக் காலத்தைக் கழித்த பூமி அது. அங்கே ஓங்கி வளர்ந்து கண்களுக்கு காட்சியாக இருக்கும் மாதாவின் ஆலயம் அஸ்திவாரம் இடப்பட்டு அரச்சிக்கப்பட்ட நாள் வரை அதன் வளர்ச்சியை கண்கூடாக கண்டதுமாத்திரமல்ல. அதன் ஒவ்வொரு ஏற்ற நிலையிலும் பங்கெடுத்தவர்களில் நானும் ஒருவன். அந்த ஊர் சிற்றூராக இருந்தாலும் பல வகைகளில் பெயரும், புகழும் பெற்ற ஊர். அந்த பெயரும் புகழும் பெற அரும்பாடுபட்டு உழைத்து சாதனை படைத்தவர்கள் பலர். இன்றைய நவீன நிர்வாகக் கலைக்கு சமமாக அந்த கால கட்டத்திலும் பிரமிக்கத்தக்க வகையில் கிராமத்தை நிர்வாகம் நடத்திய பெரியவர்கள் பலர் வாழ்ந்த ஊர். அவற்றையெல்லாம் இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்வது அவசியம். அதை உணர்ந்ததின் விளைவுதான் இந்த கட்டுரை. முதலில் நான் எழுதப்போவது பொத்தக்காலன்விளை என்ற பெயர் வந்த கதை பற்றியது.

கத்தோலிக்க கிறிஸ்தவ மதம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் போர்த்துக்கீசிய மிஷனரிகளால் தென் தமிழ்நாட்டின் கடற்கரை கிராமங்களுக்கு கொண்டுவரப்பட்டது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். பின்னாளில் 19–ம் நூற்றாண்டின் துவக்கத்தில் (சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால்) ஆங்கிலேயர் ஆட்சி வேரூன்ற ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஆங்கிலிக்கன் சபையை சேர்ந்த மிஷனரிகள் தென் தமிழ்நாட்டிற்கு வந்து அந்த சபையை பரப்ப பெரும் முயற்சி எடுத்தார்கள். அவர்களில் முக்கிய பங்கு வகித்தவர் பிஷப் கால்டுவெல் ஆவார். இவர் இடையன்குடியை தலைமை இடமாகக் கொண்டு நாடார் சமூகத்தினரை ஆங்கிலிக்கன் சபைக்கு மதம் மாற்றுவதில் பெரும் பங்கு ஆற்றினார். அவர் எழுதிய திருநெல்வேலி கெசட்டியார் என்ற புத்தகத்தில் இவ்வாறு கூறுகிறார். சாத்தான்குளம் அருகில் ஒரு சிறிய கிராமம். அனைவரும் நாடார்கள். எங்களுடைய முயறசியால் அங்கு வாழ்ந்த அனைத்து குடும்பங்களும் ஒரே நாளில் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். நாடார் சமுதாயத்திலிருந்து முதல் முதலாக ஒரு கிராமம் முழுவதும் எங்கள் சபைக்கு மாறினதால் அந்த ஊருக்கு முதலூர் என பெயரிட்டோம் என்று பிஷப் கால்டுவெல் குறிப்பிடும் ஊர் நம்மூர் அருகே உள்ள தற்போதைய முதலூர் என்பதில் சந்தேகமில்லை.

அதே சமயத்தில் கடற்கரை கிராமமான மணப்பாட்டிலிருந்து கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தை உள்நாட்டில் பரபபுவதற்காக உபதேசியார்களும், போதகர்களும் முயற்சி எடுத்து சொக்கன்குடியிருப்பில் ஒரு தலத்தை ஆரம்பித்துள்ளனர். பிற்காலத்தில் அங்கு ஒரு கத்தோலிக்க குருவானவரும் இருந்து நாடார் சமுதாயத்தினரிடையே மறைபணி ஆற்றி வந்துள்ளார். அதன் தாக்கம் முதலூரிலும் ஏற்பட்டுள்ளது. அதன் விளைவு அங்கு ஆங்கிலிக்கன் சபைக்கு மதம் மாறிய ஐந்து குடும்பங்கள் போதகர் ஹெலன் என்பவருடைய தலைமையில் ஊரிலிருந்து வெளியேறி மதம் மாறி அருகில் இருந்த பனங்காட்டில் ஒரு குடியேற்றத்தை நிறுவியுள்ளனர். அங்கு பனை ஓலையால் வேயப்பட்ட ஒரு மாதா கோவிலையும் நிறுவி மாதாவை வழிபட்டு வந்துள்ளனர். அந்த குடியேற்றத்திற்கு போதகர் ஹெலன்பிளை என்றும் பெயரிட்டுள்ளனர்.

சொக்கன்குடியிருப்பில் இருந்த குருவானவர் இந்த போதகர் ஹெலன் விளைக்கு வந்து அங்கு இருந்த மக்களுக்கு கத்தோலிக்க மத கோட்பாடுகளையும் வழிபாட்டு முறைகளையும் கற்றுக் கொடுத்துள்ளார். இதைப்பற்றி தனது நாட்குறிப்பிலும் மறைமாவட்டத்திற்கு எழுதிய மடல்களிலும் குறிப்பிட்டுள்ளார். இந்த போதகர் ஹெலன்விளை தான் மக்களின் வாயில் நுழைந்து வெளியே வரும்போது பொத்தக்காலன்விளை யாக உருமாறி மறுபிறவி பெற்றுள்ளது. இவ்வாறு பெயர் மாறிய கிராமங்கள் பல உள்ளன. பொத்தக்காலன்விளை ஊருக்கு மேற்கே விஜய நாராயணபுரம் என்ற ஊர் வெசலாமரம் என்றும் கிழக்கே நாராயணன் குடியிருப்பு நரையன்குடியிருப்பாகவும் தெற்கே பால் ஐயர் புரம் போலையார் புரமாக மாறி மக்களால் அழைக்கப்படுதலும் இதற்கு நல்ல உதாரணங்கள். இது தான் உண்மை. மற்றபடி அந்தக் காலத்தில் பலருக்கு யானைக்கால் வியாதி பரவி பலர் பெருத்த காலோடு இருந்ததால் பொத்தக்காலன்விளை என்று பெயர் வந்ததாக கூறுவது அபத்தம். உண்மை அல்ல.... -இன்னும் வரும்.

# இயேசுவின் திரு இருதயநண்பர்கள் சபை திருவிழா

பொத்தக்காலன்விளை புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் 6-ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கான இயேசுவின் திரு.இருதய நண்பர் சபை திருவிழா பங்குத்தந்தை R.ஜோப் ரவிபாலன் அடிகளார் ஆலோசனையின் படி ஜூன் மாதம் 20ம் தேதி வெள்ளிக்கிழமை காலை நவநாளுடன் ஆரம்பமாகிறது. 27ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 8-ம் திருவிழா மாலை ஆராதனையில் புதிய உறுப்பினர்கள் மற்றும் சபைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த ஆண்டு 26 மாணவர்களும், 28 மாணவிகளும் புதிதாக சேர்ந்தார்கள். சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 155 ஆகும். 29ம் தேதி ஞாயிறு காலை பங்குத்தந்தை தலைமையில் திருவிழா திருப்பலி மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தலைவர் : T.அந்தோணி ஜெகதீஷ் தலைவி : C.சந்தியா ராக்கின்

செயலாளர் : V. கிளாடிஸ் மில்க்கா பொறுப்பாளர்கள்: 12ம்-வகுப்பு A. ஆரோக்கிய ராஜா A. ஜெரின் மேரி, 10-ம் வகுப்பு A ஜெரிஷ் மைக்கிள், A. செல்வ ஜெபர்ஷியா, 9-ம் வகுப்பு A. ஜோயல் ஆண்டனி L. ஜெனிா, 8-ம் வகுப்பு - J. பார்வின் ஜோர்ஜியா M. சகாய வளர்மதி

7-ம் வகுப்பு-J. அரிஸ்வின், J.ஜாய்ஸ் பிரித்தி, 6-ம் வகுப்பு J.ஜீலியன் டிரோஸ் J. சகாய ஜெரின்

# கடவுள் அருள்

சாந்தன் என்பவன் ஓர்அரசனுடைய அரண்மனையில் ஊழியனாக பணியாற்றி வந்தான். அவன் யாருடன் உரையாடினாலும் “ கடவுள் அருளால் நலமாய் முடிந்தது!” என்று அடிக்கடி சொல்வது வழக்கம் அவன் அடிக்கொரு தரம் இந்தத் தொடரைக் கூறுவதால், அரசன் அதனைக் கேட்டுக் கேட்டு மிகவும் எரிச்சலானான். அவன் அதற்காகச் சாந்தனை மிகவும் கடிந்து கொண்டான்.

ஒரு நாள் சாந்தன் தனது சொந்த ஊருக்குச் சென்று திரும்பினான். அவன் எப்போது தன் ஊருக்குச் சென்று திரும்பினாலும் தனது தோட்டங்களில் விளைந்த கனிகளைக் கொண்டு வந்து அரசனுக்கு அளிப்பது வழக்கம். அதேபோல் இம்முறையும் கனிகளைக் கொண்டு வந்து அரசனிடம் கொடுத்தான்.

கனிகளை வாங்கிய அரசன் அவற்றை ஒவ்வொன்றாகச் சாந்தன் மீது வீசி எறிந்தான். கனிகளும் குறிதவறாமல் அவன் மீது பட்டுக் கீழே விழுந்தன. “ எதற்கெடுத்தாலும் ‘ கடவுளின் அருள்’ என்பாயே. இப்போது எங்கே அருள்?” என்று மன்னன் கேட்டான்.

அதற்கு வேலைக்காரன் சிரித்துக், “ அரசே! கடவுளின் அருளால் எல்லாம் நன்மையாக முடிந்தது. நல்ல வேளை! தோட்டத்திலிருந்து அத்திப் பழங்களை மட்டுமே பறித்து வந்தேன். மாம்பழங்களையும், விளாம் பழங்களையும் கொண்டு வரவில்லை. அவற்றைக் கொண்டு வந்திருந்தால் என் கதி என்னவாகி இருக்கும்! ” என்றான் ! சாந்தன்.

– **மேஹா,** பொற்பை.

# உலக விளையாட்டு தினம்




உடல்வலிமை, மனவலிமையுடன் ஆற்றல் மிகுந்தவர்களாகி இளைஞர்கள் திகழ வேண்டுமென்றால் உடற்பயிற்சியும், விளையாட்டும் மிகவும் இன்றியமையாத தாகும். அலைபாயும் மனம் அடங்கி நலமான வாழ்வு வாழ விளையாட்டு முக்கிய பங்கு வகுக்கிறது.

கூடி வாழ்வதற்கான நேசம், நிறைவான பண்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை சிந்தனைத் தூண்டல் ஆகியவற்றிற்கு விளையாட்டு மிகவும் அவசியமாகும். எனவேதான் குழந்தை முதல் பெரியார் வரை அவரவர் வயதிற்கேற்ற விளையாட்டுகளை விளையாட வேண்டும்.

இளைஞரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே ஆண்டுதோறும் ஆகஸ்டு 29ம் நாள் உலக விளையாட்டு தினம் அனுசரிக்கப்படுகிறது. விளையாட்டுத் திறனில் நம் நாடு புகழ்ப் பெற்றுத் திகழும் வகையில் செயல்பட இந்நாளில் உறுதி ஏற்போம்.

– **பிரபா,** பொற்பை.




# இந்திய சுதந்திர போர்


இந்தியாவுக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் மிக, நீண்ட காலமாகவே தொடர்பிருந்தது. பண்டைய கிரேக்கம், ரோம் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு இருந்தது. அதோடு அலெக்ஸாண்டரின் இந்திய படையெடுப்பு மார்க்கோபோலோ, யுவான் சுவாங் பாஹியான் போன்ற யாத்ரீகர்கள் குறிப்பு, இந்திய மன்னர்களின் படையெடுப்பு போன்றவற்றால் இந்தியா பற்றி மேலே நாடுகளும் கீழை நாடுகளும் நன்கு அறிந்திருந்தன.

கிராம்பு, ஏலம், யானைத்தந்தம், மிளகு, மயில் தோகை மஸ்லின் துணி போன்ற வணிகப் பொருள்கள் மேலை நாடுகளில் பிரசித்திப் பெற்றவை. 1453 இல் கான்ஸ்டான்டி நோபில் துருக்கியர் வசம் ஆனதால் ஐரோப்பியருக்கும்! இந்தியாவிற்கும் தரைவழி பாதிக்கப்பட்டு ! கடல் வழி காண வேண்டிய அவசியம் ஏற்பட்டது வாஸ்கோடாகாமா இந்தியாவிற்கான கடல்வழியை கண்டு பிடித்ததும் ஐரோப்பியரின் வணிகத்தொடர்பு அதிகமானது. போர்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் எனப் பலரும் நாடி வந்த வணிக தேசமாய் இந்தியா விளங்கியது. இந்த வணிகப்போட்டி, அரசியல் ஆதிக்கப்போட்டியாக மாறிட ஆரம்பித்தது. இந்த ஆதிக்கப்போரில் ஆங்கிலேயர்களை அதிக வெற்றியும் பெற்றனர். கோவா!டையூ!டாமன் போர்ச்சுக்கீசியர் வசமும் மாஹீ, ஏனாம், காரைக்கால், பாண்டிச்சேரி, பிரெஞ்சுக்காரர் வசமும், நாகப்பட்டிணம், தரங்கம் பாடி டச்சுக்காரர்கள் வசமும், பெரும்பாலான மற்ற பகுதிகள் ஆங்கிலேயர் வசமும் என ஓர் அடிமைசங்கலி இந்தியாவில் பின்னப்பட்டது.

1857 இல் நடைபெற்ற சிப்பாய் கலகம் தான் முதல் இந்திய சுதந்திரபோர் என அழைக்கப்படுகிறது. அது முதல் 1947 வரை ஏறத்தாழ 90 ஆண்டுகளில் நெடிய போராட்டமே நமது இந்திய சுதந்திரப்போர். இங்கே அந்நியர் ஆட்சி என்றால் அது முதன் முதலில் போர்ச்சுக்கீசியரால் தான் ஏற்படுத்தப்பட்டது. 1510 இல் கோவாவில் இது தொடங்கியது. பிறகு டச்சு, பிரெஞ்சு, ஆங்கில ஆட்சிகள் பல்வேறு இடங்களில் பல கால கட்டங்களில் உருவாகியது. 1857 சிப்பாய்க் கலகத்திற்கு முன்பே 09.06.1806 இல் நடைபெற்ற வேலூர்புரட்சியும் ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு கிளர்ச்சியாகவே கருதப்படுகிறது.

1857 வரை இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக்கம்பெனி ஆட்சியே நடைபெற்றது. 187 முதல் இந்திய சுதந்திரப் போருக்கு பின் விக்டோரியா பேரரசின் அறிக்கை மூலம், இந்தியாவின் ஆங்கிலேய அரசை, இங்கிலாந்து நாட்டு அரசே ஏற்றுக்கொண்டது. 1885ல் தோற்றுவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் வங்கப்பிரிவினை திலகர் போன்றவர்களின் வீர முழக்கம் எல்லாம் சுதந்திரப் பயிர் முளைத்து வேரூன்றி துணையாயிற்று. மகாத்மாவின் அரசியல் பிரவேசம், சுதந்திர தாகம் மிக அதிகமாயிட துணை புரிந்தது. படேல், நேரு, காமராஜ், இராஜாஜி, திருப்பூர் குமரன், வ.உ.சி என காஷ்மீரில் தொடங்கி கன்னியாகுமரி வரை ஆங்கிலேயர் எதிர்ப்பை அதிகமாக்கியது. உப்பு சத்தியாக்கிரகம், ஓத்துழையாமை இயக்கம், வரிகொடா இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் என்று படிப்படியாக நடத்த சாத்வீகப் போராட்டம் இறுதியில் வென்றது. நாடு 1947 இல் ஆகஸ்ட் 15ல் விடுதலைப் பெற்றது.

– **சுஜிதா,** பொற்பை.



# விவிலியத்தில் இளைஞர்கள்

விவலியத்தில் நாம் பல இளைஞர்களின் வாழ்க்கை சரித்திரத்தை அறிய முடிகிறது.அந்த இளைஞர்களுள் இரு சகோதரர் பற்றி இங்கே காண்போம்.ஒருவன் நம்மை செய்து இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப நடந்தான். மற்றொருவன் தீமை செய்து இறைவனின் சாபத்தை பெற்றான்

அவர்கள் ஆதாமின் பிள்ளைகளாகிய காயினும்,ஆபேலும் தம்பி ஆபேல் ஆடு மேய்க்கும் தொழிலை செய்து வந்தான்.அண்ணன் காயின் விலத்தை பயன்படுத்தி விவசாயம் செய்தான்ஒருநாள் இருவரும் ஆண்டவருக்கு தாங்கள் எழைப்பின் பலனை கொடுக்க வந்தனர் காயின் நிலத்தின் பலனிலிருந்து ஆண்டவலுக்கு காணிக்கை கொண்டு வந்தான்.ஆபேலும் தன் மந்தையில் இருந்த கொழுத்த தலையீறுகளை கொண்டு வந்தான்.ஆண்டவர் ஆபேலையும் அவன் கொண்டு வந்த காணிக்கையும் கனிவுடன் கண்ணோக்கினார்.ஆனால் காயினையும் அவன் காணிக்கையும் அவர் கண்ணோக்கவில்லை.(தொடக்க நூல் 4-3,4,5

ஆபேல் தன் மந்தையில் இருந்ததில் சிறந்ததை முதல் தரமானதும்,செழமையானதும்,முதற்பேறானதுமானதும் கொண்டு வந்து காணிக்கையாயை செலுத்தினான்.அது ஆண்டவருக்கு விருப்பமானதாக இருந்ததால் ஆபேலையும் அவன் காணிக்கையும் கனிவுடன் கண்ணோக்கினார்.காயின் தன் நிலத்தின் பலனிலிருந்து சிறந்ததை பொடுத்தான்.மனிதர்கள் முகத்தை பார்க்கின்றனர் ஆண்டவரோ அகத்தை பார்க்கின்றார்.(1சாமுவேல் 16-7)

இறைவன் காணிக்கையை விரும்பாததால் தன் தம்பிஆபேல் மீது காயின் சினமுற்றான்.அவன் மணம் வாடியது.ஆண்டவர் காயினிடம் நுஏன் சின முற்றிருக்கிறாய் உன் முகம் வாடியிப்பது என்ன என்று கேட்டார்.மேலும் ஆண்டவர் நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா நீ நல்லது செய்யாவிட்டால் பாவம் உன் மேல் வேட்கை கொண்டு உன் வாசலில் படுத்து இருக்கும் .நீ அதை (பாவத்தை) அடக்கி ஆள வேண்டும் என்றான்.ஆனால் காயினோ தன் தவறை உணராமல் இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ற முறையில் நடக்காமலும் இருந்து தம் தம்பி அபேலை வஞ்சமாக வயல்வெளிக்கு அழைத்துச்சேன்று அவனை கொன்று போட்டான்.ஆண்டவர் காயினிடடிம் உன் சகோதரன் ஆபேல் எங்கே என்று கேட்க காயின் எனக்கு அது தெரியாது என்றும் பதில் கூறினார்.

முதன் முதலில் மனிதனுடைய இரத்தத்தினால் சாபமான இந்த பூமியையும்,பூமயில் வாழகின்ற அவன் சந்ததியாவின் சாபத்தையும் மீட்டு அவர்களை ஆசீர்வதிக்கவே இரண்டு ஆயிரம் வருடத்திற்கு முன் தந்தை கடவுள் மூலமாக இறைமகன் இயேசு கிறிஸ்து பூமிக்கு மனித குமாரானாக வந்து இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்து அவர் நம்மேல் விழுந்த சாபத்தையும் ஒழித்தார்.ஆகவே நாம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கிறோம்.

இளைஞரே உன் நடத்தை மாசற்றதாய்க் கொள்வது எவ்வாறு ஆண்டவரின் திருச்சட்டவாக்கை கடைப்பிடிப்பதால் அன்றோ (திருப்பாடல் 119-9) அவருக்கெதிராய் நீ பாவம் செய்யாதவாற அவரது வாக்கை உன் இதயத்தில் அருத்திக் கொள்ளங்கள்.

-**ஆர்.பங்ராஸ்** ஆசிரியர்,பொற்பை

உலகப்புகழ் பெற்றவர்கள் :

# பிராங்களின் டெலனோ ரூஸ்வெல்ட்


பிராங்களின் டெலனோ ரூஸ்வெல்ட்

அமெரிக்காவின் ஜனாதிபதியாக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவர் ஒருவரே 1882!ல் பிறந்த சட்டம் படித்த இவர் பல தொழில்கள் புரிந்தார். பின் அரசுப் பதவிகள் ஏற்று திறம்பட செயல்பட்டார். 1929 ! 33 நியூயார்க் கவர்னராக இருந்தவர். 1993!ல் ஜனாதிபதியாகத் தேர்தெடுக்கப்பட்டு 12 வருட காலம் அப்பதவியை வகித்தார். நியூடீல் எனப்படும் சீர்திருத்த முறை இவருக்கு புகழ் தந்தது. சர்ச்சிலுடன் சேர்ந்து அட்லாண்டிக் சாஸனத்தைச் செய்தவரும் இவரே. இரண்டாவது உலகப்போரில் அமெரிக்கா ஆற்றிய பங்குக்கு இவர் ஆற்றிய பணியே முக்கிய காரணமாகும். நல்ல பல நூல்களையும் எழுதியுள்ள இவர் 1945!ல் காலமானார்.

புகழ் பெற்ற இந்தியர்கள் :

# ராம் மனோகர் லோகியா

நாட்டைத் தவிர வேறு எதைப் பற்றியுமே சிந்தித்திராத அரசியல்வாதிகளில் தலையானவரான இவர், 1910 வருடம் மார்ச் மாதம் 23!ஆம் தேதி பிறந்தவர். கல்லூரிப் படிப்பை இந்தியாவில் முடித்து, பெர்லின் சென்றவர் அரசியலில் ஆராட்ச்சி கட்டுரை சமர்பித்து டாக்டர் பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பினார். அன்றே அவரது அரசியலில் வாழ்வும் தொடங்கிவிட்டது. திருமணம் செய்துகொண்டு குடும்பப் பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல் முழு நேரப் பணியில் இறங்கினார். சோலிஸ்ட் கட்சியைத் தொற்றுவித்தது வளர்த்தவர்களில் இவர் ஒருவர். 1942!ல் புரட்சியின் போது போலீசாரிடம் சிக்காமல் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ரகசிய ரேடியோ ஒலிபரப்பைச் செய்தவர். அநீதியை எங்கே கண்டாலும் அதை உடன் எதிர்க்க வேண்டும் என்பது இவர் கொள்கை. பார்லிமென்ட் உறுப்பினராக இவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கதாகும். சிந்தனைக்குரிய பல புதிய கருத்துகளை வழங்கியவர், 12!10!1967ல் காலமானார்.



# கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| D.ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை | S.நிர்மலா ராணி | மார்க்கம்பட்டி |
| W. பெமிலா வில்சன் | கவரப்பேட்டை | S.மேரி லீலா | பொற்பை |
| M. அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை | S. ஜெயந்தி தங்கம் | பொற்பை |
| கலா சகாயம் | கவரப்பேட்டை | P. மேரி பிரின்ஸிலா | பொற்பை |
| பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை | A. மேரி ஷாலினி | பொற்பை |
| கீதா சுரேஷ் | கவரப்பேட்டை | G. ரெஜினாள் மேரி | பொற்பை |
| A. அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை | A. தெரஸ்லின் ராஜன் | பொற்பை |
| T. சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை | பிரின்ஸஸ் ஜேம்ஸ் | பொற்பை |
| A. ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை | தேவசகாயம் | தி.க.குன்றம் |
| அனுா அகஸ்டின் | கவரப்பேட்டை | A. சகாய லீன் நர்மதா | தோப்புவிளை |
| A. ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை | ஜான்ஸி சேகர் | பொற்பை |
| S. தினேஷ் எல்ஸி | கவரப்பேட்டை | ஜோஸ்லின் மேரி | பொற்பை |
| P. ஸ்டெல்லா பீட்டர் | மாதர்பாக்கம் | கபிரியேஸ் மேரி | பொற்பை |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் | குயின் ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| Bசெல்வக் குமார் மலர்விழி. | தி.க. குன்றம் | | |




# ஆண்டவரின் உருமாற்றம்

இயேசு பாடுபடுவதற்கு ஓராண்டுக்கு முன் கலிலேயாவில் இருந்தார். ஒரு நாள் இராயப்பர், யாகப்பர், அருளப்பர் மூவரையும் அழைத்துக்கொண்டு தபோர் மலைக்குச் சென்றார். அவர்கள் முன் அவர் மறு ரூபமானார். நம் தேவ இரட்சகரின் முகம் சூரியனைப் போல பிரகாசித்தது. அவரது உடைகள் பனிக்கட்டியைப் போல் வெண்மையாயிருந்தது. மோயீசனும், எலியாசும் அங்கு வந்து இயேசுவுடன் பேசிக்கொண்டிருந்தனர். எருசலேமில் இயேசு படவேண்டிய பாடுகளைப்பற்றி அவர்கள் பேசினார்கள். இவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்த இராயப்பர், யாகப்பர், அருளப்பர் அங்கேயே தங்கிவிட விரும்பினார். ஆண்டவருக்கும், மோயீசனுக்கும் எலியாசுக்குமாக மூன்று கூடாரங்கள் அமைக்கலாம் என்றார். அவர் பேசிக்கொண்டிருக்கும்போது பிரகாசம் பொருந்திய மேகம் ஒன்று இயேசுவை மறைத்தது. அதிலிருந்து ஒரு குரல் எழும்பியது, இவரே நம் அன்புக் குமாரன் இவர்மேல் நாம்பிரியமாயிருக்கிறோம். இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்தக் குரல் கூறியது. சீடர்கள் மூவரும் சாஷ்டாங்கமாய் முகங்குப்புற விழுந்தார்கள். இயேசு அவர்களைத் தொட்டு எழுப்பி இதை யாருக்கும் தெரிவிக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டார்.

–தூயவர்களின் வரலாறு

# வாழ்வு தரும் வார்த்தைகள் – ஆகஸ்ட் 2014

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | புனித அல்போன்ஸ் | எரே 26:1-9 | மத். 13:54-58 |
| 2. | | எரே 26:11-16,24 | மத். 14:1-12 |
| 3. | ஆண்டின் ஞாயிறு18 | எசாயா 55:1-3 | |
| | | உரோ 8:35,37-39 | மத் 14:13-21 |
| 4. | புனித ஜான் வியான்னி | எரே 28:1-17 | மத் :14:22-36 |
| 5. | | எரே 30:1-2,12-15,18-22 | மத் 15:1-2,10-14 |
| 6. | ஆண்டவரின் உருமாற்றம் | தானி 7:9-10,13-14 | |
| | | 2பேது 1:16-19 | மத் 17:1-9 |
| 7. | புனித கயத்தான் | எரே 31:31-34 | மத் 16:13-23 |
| 8. | புனித பொமினிக் | நாகூ 2:1,3;3:1-3,6-7 | மத் 16:24-28 |
| 9. | புனித தெரசா பெனடிக்ட் | அப 1:12;2:4 | மத் 17:14-20 |
| 10. | ஆண்டின் ஞாயிறு 19 | 1அர 19:9,11-13 | |
| | | உரோ 9:1-5 | மத் 14:22-23 |
| 11. | புனித கிளேர் | எசேக் 1:2-5,24-28 | மத் 17:22-27 |
| 12. | | எசேக் 2:8,3:4 | மத் 18:1-5,10,12-14 |
| 13. | | எசேக் 9:1-7;10:18-22 | மத் 18:15-20 |
| 14. | புனித மாக்ஸ்மில்லியன் கேம்பே | எசேக் 12:1-12 | மத் 18:21,19:1 |
| 15. | கன்னிமரியின் விண்ணேற்பு | திவெ 11:19;12:1-6,10 | |
| | | 1கொரி 15:20-26 | லூக் 1:39-56 |
| 16. | புனித ஸ்டீபன் | எசே 18:1-10,13,30-32 | மத் 19:13-15 |
| 17. | ஆண்டின் ஞாயிறு 20 | எசாயா 56:1,6-7 | |
| | | உரோ 11:13-15,29-32 | மத் 15:21-28 |
| 18. | புனித ஹெலினா | எசேக்24:15-24 | மத் 1:16-22 |
| 19. | | எசேக் 28:1-10 | மத் 23-30 |
| 20. | புனித பெர்னாந்து | எசேக் 34:1-11 | மத் 20:1-16 |
| 21. | புனித பயஸ் எக்ஸ் | எசேக் 36:23-28 | மத் 22:1-14 |
| 22. | அரசியான புனித கன்னி மரியா | எசேக் 37:1-14 | மத் 22:34-40 |
| 23. | புனித லீமா ரோஸ் | எசே 43:1-7 | மத். 23:1-2 |
| 24. | ஆண்டின் ஞாயிறு 21 | எசாயா22:18-23 | |
| | | உரோ.11:33-38 | மத். 16:13-20 |
| 25. | | 2தெச.1:1-5, 11-12 | மத். 23:13-22 |
| 26. | | 2 தெச 2:1-3,14-17 | மத்.23:23-25 |
| 27. | புனித மோனிகா | 2 தெச.3:6-10,16-18 | மத். 23:27-32 |
| 28 | புனித அகஸ்டின் | 1கொரி.1:1-4 | மத். 24:42-51 |
| 29 | | 1கொரி 1:17-25 | மாற். 6:17-29 |
| 30 | புனித பெலிக்ஸ் | 1 கொரி. 1:26-31 | மத்.25:14-30 |
| 31. | ஆண்டின் ஞாயிறு 22 | எரே.20:7-8 | |
| | | உரோ.12:1-2 | மத். 16:21-27 |



# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி : தொடக்கநூல் அதிகாரம் 6 முதல் 15 வரை**

1 ஆண்டவரின் அருள் பார்வை யாருக்குக் கிடைத்தது?
2 பூவுலகு --------------யால் நிறைந்திருந்தது?
3 பேழை எந்த மரத்தால் செய்யப்பட்டது?
4 பேழையின் உள்ளேயும் வெளியேயும் எது பூசப்பட்டது?
5 பேழைக்குள் புகுந்த மனிதர் எத்தனை பேர்?
6 பேழையின் கதவை மூடியது யார்?
7 வெள்ளம் மண்ணுலகில் எத்தனை நாள் பாய்ந்து பெருகிற்று?
8 புறா தன் அலகில் கொண்டுவந்தது எந்த மரத்தின் இலை?
9 மனிதனின் இதயம் இளமையிலிருந்தே எதை உருவாக்குகின்றது?
10 உயிர் எதில் இருக்கிறது?
11 உடன்படிக்கையின் அடையாளம் எது?
12 கானானின் தந்தை யார்?
13 நோவா என்ன தொழில் செய்தார்?
14 ஆற்றல் மிக்க வேடனாகத் திகழ்ந்தவன் யார்?
15 எபேரியரின் முதுபெரும் தந்தை யார்?
16 வானளாவிய கோபுரம் கட்டப்படவிருந்த இடம் எது?
17 யார் வழியாய் மண்ணுலகில் மக்களினம் ஆசி பெறும்?
18 சாலேமின் அரசர் யார்?
19 சாவே பள்ளத்தாக்கின் மற்றொரு பெயர் என்ன?
20 ஆபிரம் ஆண்டவர் மீது ------ கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு ------------- யாகக் கருதினார்.



– **ஆல்வின் அண்ணமலை,**
தலைமை ஆசிரியை (ஓய்வு).

### அடுத்த இதழ்

**வேளாங்கன்னியில் கோயில் கொண்டுள்ள ஆரோக்கிய அன்னை பற்றி சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது. உங்களுடைய வாழ்வில் அன்னை புரிந்த அற்புதங்கள் அதிசயங்கள் மேலும் அன்னையைப் பற்றிய கட்டுரைகள் கவிதைகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் எங்களை வந்து...**

## சேர வேண்டிய கடைசி நாள் : 15-08-2014

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.08.2014**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். தேவைக்கேற்ப மாலை 4.00மணிக்கும், 6.30 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.
- முதல் சனி தவிர்த்து மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |


Happy
Independence Day!
solomon Graphics, Tsy. 9788675143